பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

INTER NET
மூலம்
குறைந்த கட்டணத்தில் தொடர்புகொள்ள
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA
T.P :021-2222670, 2223588
FAX: 2223214
Email-[illegible]skr@eureka.lk

# வலம்புரி

# VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை 21 | ஞாயிற்றுக்கிழமை (04.05.2003) | தொலைபேசி ~ 7*23378 | ஒலி 136

## ஈ.பி.டி.பி. யினருக்கு அரசு தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும்

### டக்ளஸ் எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

எமது கட்சி உறுப்பினர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும் இல்லாவிடில் தற்பாதுகாப்பிற்காக எம்மிடம் இருந்து பெறப்பட்ட ஆயுதங்களை மீள எமக்கு தர வேண்டுமென அரசிடம் கோரியுள்ளதாக ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

எமது கட்சி உறுப்பினர்கள் மீது பரவலாக இடம்பெற்றுவரும் தாக்குதல்கள், கொலைச் சம்பவங்கள் மற்றும் மிரட்டல்களுக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனவும் டக்ளஸ் தேவானந்தா குற்றம் சாட்டியுள்ளார்.


நேற்றைய தினம் கரவெட்டி முன்னாள் பிரதேச சபைத் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகவும், எமது பாதுகாப்பு தொடர்பாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்துக் கலந்துரையாட இருந்தபோதிலும் அவர் தற்போது கொழும்பில் இல்லாத காரணத்தால் அவரைச் சந்திக்க முடியாது போயுள்ளதாகவும், இன்று அவரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் நேற்று பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

(த-5)

## கரவெட்டி முன்னாள் பிரதேச சபை தலைவர் நேற்று சுட்டுக் கொலை!

(நமது நிருபர்கள்)

கரவெட்டி முன்னாள் பிரதேச சபைத் தலைவர் நேற்று மாலை இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.



நேற்று மாலை 5.30 மணியளவில் தும்பளை மணியகாரன் சந்திப் பகுதியில் இடம்பெற்ற இச் சூட்டுச் சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான தர்மராசா ஜெயராசா (வயது 45) என்பரே கொலை செய்யப்பட்டவராவார்.

சுட்டுக் கொலை செய்யப்பட்ட தர்மராசாவும், ஏனைய இரண்டு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் வாகனம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த இரண்டு இனந் தெரியாத நபர்கள் தும்பளை மணியகாரன் சந்திப் பகுதியில் வாகனம் மெதுவாகச் சென்ற வேளை, வாகனத்தை முந்திச் சென்று முன்மறித்து வாகனத்தில் இருந்தவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து

(10ம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுத் தலைவர் புலிகளுடன் முக்கிய சந்திப்பு!

(கிளிநொச்சி நிருபர்)

**இலங்கை கடற்பரப்பில் கடற்புலிகளின் கடல்போக்குவரத்து மற்றும் உயர் பாதுகாப்பு வலயம், யாழ். நகர் படைத்தள இடமாற்றம் ஆகிய விடயங்கள் குறித்து யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டெலவ்சன் தலைமையிலான குழுவினர் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோரை நேற்று கிளிநொச்சியில் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.**

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டெலவசன் தலைமையிலான குழுவினர் இலங்கை விமானப் படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் நேற்றுப் பிற்பகல் 2.30மணிக்கு கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

கிளிநொச்சி வந்தடைந்த யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் அங்கு விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிமனையில் இடம் பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டனர். சுமார் இரண்டரை மணித்தியாலமாக இடம்பெற்ற இச் சந்திப்பில் விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின் போது விடுதலைப்புலிகளின் கடற்போக்குவரத்து தொடர்பாகவும் உயர் பாதுகாப்பு வலய பிரதேசங்கள் தொடர்பாகவும் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டபோதும் எந்தவிதமான முடிவுகளும் எடுக்கப்படவில்லை என விடுதலைப் புலிகளின் ஊடகத் துறைப் பொறுப்பாளர் தயா மாஸ்ரர் தெரிவித்துள்ளதுடன்:

யாழ். உயர் பாதுகாப்பு வலய பிரதேசத்தில் உள்ள இராணுவ முகாம்களை மாற்றுவது தொடர்பாகவும் புதிதாக இராணுவ முகாம் கோட்டைப் பகுதியில் அமைப்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் கண்காணிப்புக் குழுத தலைவரிடம் சு.ப. தமிழ்ச்செல்வன் விளக்கியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

(ம)

அன்பு வாசகர்களே!
நாளை உங்களின்
சங்குநாதம்
விஷேட அரசியல் கட்டுரையுடன்
விலை ரூபா. 12/-

## டக்ளஸின் குற்றச்சாட்டுக்கு விடுதலைப்புலிகள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

'கரவெட்டி முன்னாள் பிரதேச சபைத் தலைவர் தர்மராசா ஜெயராசா மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் விடுதலைப்புலிகளாலேயே மேற்கொள்ளப்பட்டதென நேற்றிரவு டக்ளஸ் தேவானந்தா தெரிவித்த குற்றச்சாட்டிற்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையிலேயே புலி

(10ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு இராஜதந்திரிகளை வன்னி வரும் 'பாலா' சந்திப்பார்!

(கிளிநொச்சி)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் மந்திராலோசனை நடத்துவதற்காக இவ் வாரம் வன்னிக்கு வரவுள்ள விடுதலைப்புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னியில் தங்கியிருக்கும் காலத்தில் பல வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்புக்கு நேற்று வருகை தந்துள்ள ஜப்பான் நாட்டு விசேட தூதுவர் யசுசி அகாஸி எதிர்வரும் புதன்கிழமை வன்னிக்குச் சென்று புலிகளின் தலைவர்

(10ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் இருந்து இராணுவம் விலகக்கூடாது

### அஸ்கிரிய மகாநாயக்கர் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை பேச்சுக்கு வருமாறு தூண்ட வேண்டுமென அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய உடுகம ரி. புத்திரகித்த தேரர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன நேற்றுக் காலை கண்டியில் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இராணுவம் வட கிழக்கில் இருந்து எவ் வகையிலும் விலகக் கூடாது என்றும் கடற்படை எவ்வித தடைகளும் இன்றி அதன் கடமைகளைச் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் மகாநாயக்கர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை வடக்குக் கிழக்கில் உள்ள சேதமடைந்த பௌத்த வழிபாட்டுத் தலங்களை புனரமைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தனக்கு உத்தரவிட்டுள்ளதாக ஜெயலத் ஜெயவர்த்தன மகாநாயக்கரிடம் தெரிவித்தார்.

(ந-5)

## கோட்டைப் பகுதியில் படைமுகாம் அமைக்கும் முடிவில் மாற்றமில்லை

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பேட்டி

(கொழும்பு)

யாழ். நகரில் சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டல்களில் நிலை கொண்டுள்ள படையினரை கோட்டைப் பகுதிக்கு இடமாற்றம் செய்வதென எடுக்கப்பட்ட தீர்மானத்தில் எந்த விதமான மாற்றமும் செய்வதற்கில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார்.

டெய்லி நியூஸ் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

யாழ். கோட்டைப் பகுதியில் படைமுகாம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கடிதமொன்றை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் எமக்கு அனுப்பியிருந்தார். அக் கடிதத்திற்கு பதிலளிப்பதற்கு இந்தியா சென்றுள்ள அமைச்சர் மெலிந்த மொறகொட மற்றும் சமாதான செயலக பணிப்பாளர் பேர்னாட் குணதிலக ஆகியோரின் வரவை எதிர்பார்த்திருப்பதாகவும் அவர்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து
# சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### 9எண் ~பொதுப்பலன்

எண் சாத்திரத்தில் 9 எண் செவ்வாய் என்று அழைக்கப்படுகிறது. தைரியம்,வீரதீரச் செயல், நாட்டைப் பாதுகாக்கும் இராணுவம், பொலிஸ் இப்படிப் பல்வேறு துறைகளில் சிறந்து நிற்பது இந்த ஆதிக்கத்தின் பலனாகும். ஒவ்வொரு மாதங்களிலும் வருகின்ற 9,18,27 போன்ற திகதியில் பிறந்த அனைவரும் செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் உடல் பலமும்,மனபலமும் பெற்று விளங்குவர். தான் எடுத்த காரியத்தைச் செவ்வனே செய்து முடிக்கப் போராடி உழைப்பவர்.எந்த நேரத்திலும் உடல் வருத்தம் பாராது உழைப்பர்.

போக விஷங்களில் அதிக நாட்டம் கொண்டவராக இருந்தாலும்,பிறரைப்பாதிக்குமாறு நடக்க மனம் கூசுவர்.இவர்களில் சிலர் மந்தமானவர்களாகவும் இன்னும் சிலர் மின்னல் வேகத்தில் சிந்தனை செய்பவராகவும் இருக்கின்றனர். முரட்டுக் குணம் படைத்தவராக இருந்தாலும் சில நேரங்களில் தேவையில்லாத விஷயங்களில். இறங்கி மாட்டிக்கொள்வர். அனைத்து இன்பமான காரியங்களிலும் இவர்களின் மனம் இழுத்துச் செல்லும். ஆடம்பரமான பொருட்களை வாங்கிச் சேர்ப்பதில் நாட்டம் உடையவராக இருப்பர். இயந்திரங்கள், வாகனங்கள்,கட்டடங்கள் போன்றவற்றில் ஆர்வம் செலுத்துவர். இயற்கைக் காட்சிகளையும்,மலைப்பிரதேசங்களையும் கண்டு இவர்கள் மனம் அமைதி கொள்ளும்.இவர்களில் 9வகையானவர்களைப்பற்றிப் பார்போம்.

### உடல் எண்-9
### உயிர் எண்-1

9,18,27,போன்ற திகதியில் பிறந்து இவர்களது பிறந்த திகதி, மாதம்,வருடம் ஆகிய இம் மூன்றையும்கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வருமேயானால் இவர்கள் செவ்வாய்,சூரியன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர் புத்திக் கூர்மையுடனும்சுறுசுறுப்புடனும்,நிர்வாகத்திறமையுடனும் பார்ப்பதற்கு கவர்ச்சியாகவும் காட்சி அளிப்பர்.

எப்பொழுதும் தூய்மையான ஆடையை அணிந்து முகச் செழிப்புடன் இருப்பர். தைரியமாக எதையும் செய்யத் துணியும் இவர்கள், சில நேரங்களில் சிந்திக்காது சில காரியங்களைச் செய்து பின் வருந்துவர். பெண்களாக இருந்தாலும் ஆண்களாலும்,ஆண்களாக இருந்தால் பெண்களாலும் பொருளாதார

**சோதிட பலன்**

முன்னேற்றத்தை அடைகின்றனர். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் பெண்களால் மன வேதனை அடைவர்.தைரியமாகச் செயற்படும் இவர்களுக்கு ஆரம்பவாழ்க்கை போராட்டமாக இருந்தாலும் பின் வாழ்க்கையில் முன்னேற்றம்காண்பர். பல்வேறுசோதனைகளைச் சந்தித்து வந்தால் அனுபவமிக்க மனிதராக வாழ்கின்றனர். கல்வியில் தடை ஏற்பட்டபோதிலுமவாழ்க்கையைவெற்றிகரமாக அமைத்துக் கொள்வர்.

இளமையில் துணிகரமாகத் தன் மனதில் உதித்ததையெல்லம் செய்து விடுவர். இவர்கள் மனம் நீர் வீழ்ச்சி,மலைப்பிரதேசங்கள் ,நீர்த்தேக்கங்கள்,கடற்கரையோரம் போன்றவைகளைக் கண்டு அமைதி கொள்ளும். எப்பொழுதும் சுதந்திரமாக வாழ ஆசைப்படுவர். இவர்கள பிற கட்டுப்பாட்டின் கீழ் வாழ மாட்டார்கள்.அரசியல் ஈடுபாடும் இலக்கிய ஈடுபாடும் கொண்ட இவர்கள் .தனது கருத்துக்களைப் பேசும் பொழுது காரசாரமாகப் பேசுவர் .

இன்னும் சிலர் அரசியலில் நல்ல நிலையை அடைகின்றனர். இவர்களுக்கு நண்பர்கள் அதிகம் இருப்பதால் செலவும் அதிகம். அதே நேரங்களில் செலவு இல்லாமலே ஒரு காரியத்தைச் செயல்படுத்தவும் முடியும்.தன் பிறந்த திகதிக்குப்பொருத்தமான எண்ணில் பெயர் அமைந்து விட்டால் நல்ல மனைவி,நல்லஆரோக்கியம்,நல்ல குழந்தை, பெரும்செல்வம் ஆகிய வற்றைப் பெற்று வாழ்கின்றனர். பெண்களால் வீண் குழப்பங்களும்,கோர்ட் வழக்குகளும்வந்து மன வேதனை அடைவா. இதனால் பெயரை பொருத்தமான நல்ல எண்களில் அமைத்துக் கொள்ளவும்.

சட்டம்,சமயம், ஜோதிடம், தத்துவம் ,மருத்துவம் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். எதிர்ப்புகள் வந்து விட்டால், தன்னை விடப் பெரியவர்களாக இருந்தாலும்,பலம்கூடியவராக இருந்தாலும் கடுமையாக எதிர்ப்பர். ‘மனிதன் என்று பிறந்து விட்டால் மாய்வதென்பது உண்மையடா’ என்று கூறி எதிலும் துணிந்து செயற்படுவர். இதற்கு ஏற்றாற்போல் பெயரும் நன்றாக அமைந்து விட்டால் நல்ல முன்னேற்றத்துடன் வாழ்வர்.

தன் மனத்திருப்திக்காக செலவு செய்யத் தயங்க மாட்டார்கள். ஆனால பணம் இல்லாதபோது மனம் உடைந்து இருப்பர்.இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் பிறந்த ஊரை விட்டு சற்றுத் தொலைவில் உள்ள ஊரை நாடி வாழ்க்கையில் உயர்வடைவர். நண்பர்களுக்குக் கஷ்டம் வருகின்றபோது முன்னின்று உதவி செய்வர். எப்பொழுதும் எதையாவது சிந்தனை செய்து கொண்டே இருப்பர்.

இயற்கைக்காட்சிகளையும்,நீர் வீழ்ச்சிகளையும், தொழிற்கூடங்களையும்,கடற்கரையோரங்களையும் கண்டு மனம் அமைதி கொள்ளும். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் வக்கீல்,டாக்டர், இன்ஜினியர், பெரிய தொழில் அதிபர்கள், அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் காணப்படுகின்றனர்.

ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் மேற்குறிப்பிட்ட நல்ல பலன்கள் குறைந்து கஷ்டங்களையும், போட்டிகளையும் சந்திக்க நேரிடும்.இதனால் பெயரைப் பொருத்தமான நல்ல எண்களில் மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம்.

### தொழில்

இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் உத்தியோகம் செய்பவர்களா

**ஆர். ஐ. துரைமுருகர்**

கவும் சிலர்தொழில் செய்பவராகவும் இருக்கின்றனர். இவர்கள் செய்ய வேண்டிய தொழில் ஒபபந்த வேலைகள், ஏஜென்சி, நெருப்பு சம்பந்தமான தொழில், கற்கள் சம்பந்தமான தொழில், எழுத்து சம்பந்தமான தொழில் போன்ற வற்றால் பொருள் ஈட்டுவர்.

### நோய்

இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான நோய்களும் முதுகுவலி, கண்நோய்,இரத்த அழுத்தம்,இடுப்பு வலி,மூட்டு வலி,நரம்புத்தளர்ச்சி, சிறு நீரககோளாறு போன்றவைகள் வந்து நீங்கும்.

### பெயர் அமைக்கும் முறை

இவர்களுக்கு செவ்வாய் ,சூரியன், சுக்கிரன், புதன் போன்ற ஆதிக்கமான 27,45;19,37,46,64;15,24,33, 42,51,60,69;14,23,32,41,50,59,77 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

### பின்பற்றவேண்டியவை

யோகமான எண்-9,5,1,6. யோகமான திகதிகள்-5,14,23; 6,15,24;9, 18,27;1,10,19,28.யோகமான மோதிரக்கல்-பவளம்,மாணிக்கம், கனக புஷ்பராகம்,தங்கபுஷ்பராகம் நவரத்தினம் யோகமான நிறம் -வெளிர் நீலம், மஞ்சள், சிவப்பு. ஆகாத திகதி- 2,11,20,29;7,16,25.ஆகாத நிறம் -கறுப்பு பச்சை (தொடரும்)

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வரும் மாபெரும் தாச்சிச்சுற்றுப்போட்டியின் 4வது சுற்றில்,இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.45 மணிக்கு இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகமும், சண்டிலிப்பாய் சிவசக்தி விளையாட்டுக்கழகமும் பங்கு பற்றவுள்ளன. (உ-10)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் வாரந்தோறும் இடம் பெற்று வரும் திரைப்படக்காட்சித்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு புவியயற்றுறை மண்டபத்தில்கே.ஆர் மோகனன் இயக்கிய ‘ஸ்வரூபம’ எனும் மலையாள மொழித்திரைப் படம் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வமுள்ளோர் எவரும் மேற்படி திரைப்படக்காட்சித் தொடரில் கலந்து பயன் பெற முடியும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (த-5)

## சமய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது இந்து மாநாட்டை ஒட்டி கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ சபாஸ ஐயப்பன் ஆலயத்தில் இடம் பெற்று வரும் சமயநிகழ்வுகளில் மூன்றாவது நாளான இன்று ,

விசேட பூசை மற்றும் இணுவில், தவராசா குழுவினரின் திருமுறை ஓதுதல் ,இணுவில் என்.ஆர்.கோவிந்தசாமியின் புதல்வர்களின் மங்கள இசையும், எஸ்.குமாரசாமியின் சமயச் சொற்பொழிவு, கோண்டாவில் ப.குமரேஸின் புல்லாங்குழல் கச்சேரி என்பன இடம் பெறவுள்ளன. (உ-10)

## கல்விச் சுற்றுலா

(இருபாலை)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாம் வருட மாணவர்கள் இம்மாத நடுப்பகுதியில் தென்பகுதிக்கு கல்விச் சுற்றுலா ஒன்றைமேற்கொள்ளவுள்ளனர்.(த-11)

# கடற் புலிகளுக்கு அங்கீகாரமா ?
# அனுமதிக்க முடியாது —சரத் சீற்றம்

(கொழும்பு)

கடற்புலிகளின் படையணியை அங்கீகரிக்க தாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே சரத் அமுனுகம இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

கடற் புலிகளின் படையணியை தனயான கடற்பிரிவாக அங்கீகரிக்க வேண்டும் என கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரெகேவ் ரெலவ்சன் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடந்த மாதம் சமர்ப்பித்துள்ள ‘இலங்கைக் கடற்படைக்கும் -கடற் புலிகளுக்கும் இடையிலான மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளும் வழிமுறைகள்’ என்ற முதலாவது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இதனை நாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.அவர்களை தனியான கடற்பிரிவாக அங்கீகரித்தால்,அவர்கள் அதனைச் சாதகமாக்கி தமது கடற்படைப்பலத்தை பலப்படுத்திவிடுவார்கள் என்றார். (உ-10)

## யாழ்.குடா நாட்டில் கண்டு பிடிக்கப்பட்ட
# 23 எயிட்ஸ் நோயாளர்களில் 16பேர் உயிரிழந்தனர்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிலையப் பிரதி நிதிகள் எயிட்ஸ்நோய் தொடர்பான விழிப்புணர்வுக்கருத்தரங்குகளை குடா நாடு பூராகவும் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக குடா நாட்டில் இடம் பெற்று வரும் கலாசாரச் சீரழிவுகள் எயிட்ஸ்நோய் அதிகரிப்பிற்கு காரணமாக உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று பி.ப. யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் நடை பெற்ற எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இது வரை 23 எயிட்ஸ்நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 16பேர் இறந்துள்ளதாகவும்,தெரிவித்த அவர்கள் இலங்கையில் மாவட்ட ரீதியான சனத்தொகையுடன் ஒப்பிடும்போது யாழ்ப்பாணத்திலேயே எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் வீதம் அதிகமாகவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (த-5)

## பரஸ்பரம் புரிந்துணர்வுடன்
# பேச்சுவார்த்தையைத் தொடருமாறு
# ஐரோப்பிய யூனியன்வலியுறுத்து

(கொழும்பு)

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ஸ்ரீ லங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்பட்டு சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் .

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

சமாதானப் பேசசுவார்த்தைகளை விடுதலைப்புலிகள் இடை நிறுத்தியிருப்பது குறித்து தாம் தீவிர கவனம் செலுத்தி வருவதாக கூறியுள்ள ஐரோப்பிய ஒன்றியம் இது தொடர்பான அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

முன்னேற்றகரமான நிலையில் இருக்கும் சமாதான முயற்சிகளும் ஜப்பானில் நடை பெறவிருக்கும் இலங்கைக்கான நிதியுதவிகள் வழங்கும் மாநாடும் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில வாழும் மக்களின் வாழ்க்கைதரத்தை மேம்படுத்தும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இரு தரப்பினரும் பேச்சினைத் தொடர்ந்து இந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும்.

அவ்வாறானால் தான் நாட்டில் சமாதானமும் அமைதியான வாழ்வும் தோன்றும். அத்துடன் சர்வதேச நாடுகள் வழங்கும் நிதியுதவியைக் கொண்டு போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு புத்துயிர் ஊட்டுவதுடன் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தலாம் என்றுள்ளது. (உ-10)

## முறையற்ற விதத்தில்
# உல்லாசம் அனுபவிக்கிறார்
### கடற்படைத் தளபதி மீது இப்படியும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடற்படைத்தளபதி தயாசந்தகிரி தவறான முறையில் கொள்வனவு செய்யப்பட்ட உல்லாசவாகனங்களைப் பயன்படுத்தி வருவதாக குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

கடற்படையின் பயன் பாட்டிற்கென 2 உல்லாச வாகனங்களைக் கொள்வனவுசெய்ததாக கடற்படையினர் நாடாளுமன்ற நிதிக்குழுவினரிடம் தெரிவித்திருந்தனர்.

ஆனால் ,அந்த வாகனங்களை தயா சந்தகிரி மட்டுமே பயன்படுத்தி வருகிறார் என அந்தக் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடற்படைத்தளபதி தயா சந்த கிரியின் பயன்பாட்டிற்கு மட்டும்26 வாகனங்கள் உள்ளதாகவும் கூறப்படுகிறது. (உ-10)

## அமெரிக்கா விசா முறைகேடு
# எண்மர் மீது வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தில் இருந்த விசா வழங்கும் ஆவணங்களை முறைகேடாக விற்றார்கள் என்ற குற்றச்சாட்டின் போல் முன்னாள் அரசதுறை ஊழியர்கள் உட்பட 8பேர் அமெரிக்கப் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அமெரிக்க அரசை ஏமாற்றத் திட்டம் தீட்டினார்கள் என்றும்,அரச அதிகாரிகளுக்கு இலஞ்சம் வாங்கினார்கள் என்றும், விசா முறைகேடு செய்தார்கள் என்றும், இவர்கள் மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

இவர்களில் இரண்டுபேர் தம்பதிகள்.அத்துடன் அமெரிக்க அரச துறையின் முன்னாள் ஊழியர்களும்,இலங்கைக்கான அமெரிக்கத்தூதரக இன்னாள் பணியாளர்களும் ஆவர்.

இவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என எகிர் பார்க்கப்படுகின்றகு.

இதேவேளை, குற்றஞ் சாட்டப்பட்ட 9பேரில் 8பேர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் கலிபோனியா மாநில நீதி மன்றம் ஒன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (த)

## சென்னையில் தஞ்சம்

(சென்னை)

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணித்தலைவரும் முன்னாள் வடகிழக்கு மாகாண முதல் வருமான வரதராஜப் பெருமாள் சென்னையில் தஞ்சம் புகுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் இந்திய வெளி விவகாரத் துறை மாநிலப்புலனாய்வுப் பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் நடமாடிவருவதாகவும் இவரதும் குடும்பத்தினரதும் செலவுகளை இந்திய வெளி விவகாரத்துறை பொறுப்பேற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (உ-5)

# கடற்புலிகளுக்கு அங்கீகாரம் சாதகமாகப் பரிசீலிக்கத் தயார்

## பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கடற்புலிகள் அமைப்பை கடற்படையாக அங்கீகரிக்க வேண்டும் என்ற யோசனையை புலிகள் இயக்கம் உத்தியோகபூர்வமாக முன் வைக்க வேண்டும்.

அவ்வாறானால் அதனைச் சாதகமாகப் பரிசீலிக்க அரசு தயாராக இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கும் வரை கடற்புலிகள் தமிழர்களுக்கான கடற்படையாக இருக்க வேண்டும் என்று கடந்த திங்களன்று பளையில் இடம்பெற்ற ஆனையிறவு வெற்றிச் சமரில் மூன்றாம் ஆண்டு விழாவில் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை கூறியிருந்தமை குறித்து கருத்து வெளியிட்ட போதே பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன.

இது விடயமாக மேலும் கருத்துக் கூறிய பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள்,

கேணல் சூசை தமது போராளிகள் மத்தியில் கூறிய மேற்படி கருத்துக்கு நாம் பதிலளிக்க முடியாது.

சூசையின் யோசனை அரசுக்கு உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படும் பட்சத்தில் அதனைச் சாதகமாகப் பரிசீலிக்கத் தயார்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்பட்டவுடன் கடற்புலிகள் விடயம் ஒரு நிரந்தர முடிவுக்கு வரும் என்று மேலும் தெரிவித்துள்ளன.(உ)

## பிரதமரின் கடிதம் நிராகரிப்பு!

# பத்திரிகைச் செய்திகளை மறுக்கிறார் பாலசிங்கம்

(கொழும்பு)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கடிதத்தை தான் நிராகரித்துள்ளதாக டெயிலிமிரர் பத்திரிகையில் வெளிவந்த செய்தியை புலிகளின் பிரதம பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் நிராகரித்துள்ளார்.

இது புனைந்து உருவாக்கப்பட்ட செய்தி. பொறுப்பற்ற நடத்தை என்றும் அவர் தமிழ் நெற்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பல முக்கிய விடயங்களை உள்ளடக்கிய பிரதமரின் கடிதத்தைத் தாம் உன்னிப்பான முறையில் படித்து ஆராயப்படவேண்டியுள்ளதாகவும் அதன் பின்னரே கருத்து வெளியிடலாம் என்றும் பாலா தெரிவித்துள்ளார்.

மேலும், இக்கடிதம் தொடர்பான விடயங்களை புலிகளின் தலைமை இரண்டொரு தினங்களில் ஆராயவிருக்கின்றது என்று குறிப்பிட்ட பாலா, தான் அடுத்த வாரம் வன்னி சென்று இதுபற்றி மேலும் விரிவாக ஆராயவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

டெயிலிமிரர் பத்திரிகையிலும், கல்ப்நியூஸ் பத்திரிகையிலும் வெளியாகிய செய்திகள் அரைகுறையானவை, சரியானவையல்ல. சமாதான நடவடிக்கைகளை எதிர்ப்பவர்களை திருப்திப்படுத்தக்கூடியன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(உ-10)

# இனங்களுக்கிடையே பிளவு இதுவே ஜே.வி.பியின் இலக்கு

## வர்ணிக்கிறார் வாசுதேவ

(கொழும்பு)

மீண்டும் இனங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்தவே ஜே.வி.பியின் தீவிரமாக முனைந்து வருகின்றன்.

ஜனநாயக இடது சாரியின் முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற இடது சாரிக் கட்சிகளுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய வாசுதேவ மேலும்,

சமஷ்டி முறையிலான நிர்வாகத்தினை ஜே.வி.பி யினர் எதிர்த்து வருவது இனங்களிற்கிடையிலான சமத்துவத்தை அவர்கள் மதிக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

அத்துடன், சமாதானப் பேச்சுவார்த்தையின் அனுசரணையாளரான நோர்வேத் தரப்பினரை நாட்டை விட்டு வெளியேறுமாறு கோரும் ஜே.வி.பி யின் நோர்வேத் தரப்பினரை வரவழைத்த ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கூட்டணி அமைக்க முயல்வது எந்தவிதத்தில் நியாயமானது? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, புதிய இடது சாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண இது பற்றி கருத்துக் கூறுகையில்,

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை அனைத்து இடதுசாரிக் கட்சிகளும் பொது ஜன ஐக்கிய முன்னணியும் ஆதரிக்க வேண்டும் என்றார். (உ-10)

# ஸ்ரீ.சு.க உப தலைவர் மகிந்தவா? மங்களவா?

## கட்சிக்குள் இழுபறி தொடர்கிறது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா-சுதந்திரக்கட்சியின் உபதலைவராக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜ பக்ஷ தெரிவு செய்யப்படவிருப்பதாக தெரியவருகிறது.

இதற்கான பரிந்துரை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வருடாந்த மகா நாட்டின் போது முன்வைக்கப்படும் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

இதேவேளை, அனுரா பண்டாரநாயக்காவை மேற்படி பதவிக்கு தேர்ந்தெடுக்க பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தலைமையிலான குழு முயற்சிகள் மேற்கொண்டுவரும் நிலையில் எதிர் கட்சித் தலைவர் மகிந்த ராஜ பக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவராக தெரிவு செய்ய அக்கட்சியினைச் சேர்ந்த ஒரு சிலர் முயன்று வருவது இக் கட்சிக்குள் நிலவும் முரண்பாடுகளை எடுத்துக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (உ-10)

## அமெ.பிரதிஇராஜாங்க செயலர்

# மிகவிரைவில் இலங்கை விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பானஅமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை இருநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்காவின் பங்களிப்பு குறித்தும், இது விடயத்தில் தமது ஆதரவை தெரிவிக்கும் வகையிலும் இவரது விஜயம் அமையும் என ஐக்கிய அமெரிக்க நாடுகளின் இலங்கைத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர் கடந்த வருடம் மார்ச் மாதம் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டு பலாலியில்வைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசியதுடன் சமாதானப் பேச்சுவார்த் தைகளில் ஈடுபட்டு வரும் அமைச்சர் களான ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொர கொட, ரவூவ் ஹக்கீம் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்ததை நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.(தி)

# யுத்த நிறுத்த உடன்படிக்கையை புலிகள் கடைப்பிடிக்கின்றனர்

## உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கண்டி)

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசுடனான சமாதானப் பேச்சுவார்த்தையைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ள போதும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை விடுதலைப்புலிகள் கடைப்பிடித்து வருகிறார்கள் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று முன்தினம் கண்டியில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க அங்கு மேலும் பேசுகையில் கூறியிருப்பதாவது,

இந்திய அரசுக்கும் ,பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலே சுமூகமான உறவு நிலவி வருவதாலேயே இந்திய அரசு 20 வருட நீண்ட கால கடன் உதவியுடன் சுமார் 400 ஜீப் வண்டிகளை பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்கியுள்ளது என்று பாராட்டுத் தெரிவித்தார். (ம)

### இரண்டாவது உலக இந்து மகாநாடு தொடர்பாக...

### உரத்த சிந்தனை

# ஆள் பாதி ஆடை பாதி

இந்து சமயத்தின் சிறப்புக்களில் ஒன்று விழாக்களும் பண்டிகைகளும் நிறைந்திருப்பது. முதலிலேயே பார்த்தோம்- "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே"

தத்துவங்கள் வரட்டுத் தத்துவமாக இல்லாமல் சமய நெறியாகி வாழ்க்கையின் பாதையாக வேண்டும்.

சமய வழிபாடு கொண்டாட்டங்களாகி மக்களோடு இணைந்து மகிழ்வூட்ட வேண்டும்.

நமது இந்து சமய ஞானிகள் அதைத் தான் செய்திருக்கிறார்கள். சமய நெறியும் வழிபாட்டு முறையும் நமக்கு சுமையாக இருக்கக் கூடாது. சுகமாக இருக்க வேண்டும்.

"வெளி வேஷங்கள் எதற்கு? உள்ளத்தால் இறைவனை வழிபட்டால் போதாதா?" என்பார்கள் சிலர். ஞான நிலையில் அது சரி. ஆனால் நமது நிலையில் அது பொருந்தாது.

சீருடையும் முரசொலியும் போருக்கு எதற்கு? ஆயுதம் மட்டும் போதாதா? கையில் ஆயுதமும் உள்ளத்தில் வீரமும் சேரும் போது உணர்வை உரமாக்கி ஊக்கப்படுத்த சீருடையும் முரசொலியும் பயன்படுகின்றன.

அதுபோல அகத்தை ஆண்டவன் பால் நாடச் செய்ய அலங்காரங்களும் அரிய வாசனைகளும் ஆடல் பாடல்களும் கொண்டாட்டங்களும் துணை செய்கின்றன. "ஆள் பாதி ஆடை பாதி" என்று இதைத் தான் சொல்லுவார்கள்.

இந்த நல்ல கருத்தை நாம் உணரும் அதே நேரத்தில் இன்னொன்றையும் மறந்துவிடக்கூடாது.

ஆடையில்லாமல் ஆளுக்கு மதிப்பில்லை. இடத்திற்கும் தகுதிக்கும் ஏற்ற ஆடை தான் ஆளுக்குத் தகுந்த மதிப்பைக் கொடுக்கும். ஆனால் நன்கு கவனிக்க வேண்டிய உண்மை ஆடை மட்டும் ஆளாக முடியாது.

இன்று பல இடங்களில் சடங்குகளும் வெளி வேஷங்களும் மிகுந்த முக்கியத்துவம் பெறுமளவு உள்ளார்ந்த சமய வழிபாட்டு நெறிமுறைகள் கவனிக்கப்படாமல்மழுங்கிப்போகின்றன.

நாம் நமது சமய தத்துவ உண்மை என்ற அடிநாதத்தை மறந்து விடாமல் இருக்க வேண்டும். இந்துவாக இருக்க வேண்டும். இந்துவாகவே வாழ வேண்டும்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை"
-திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்

**ப.சிவானந்த சர்மா B.A (Hons) (கோப்பாய் சிவம்)**
**நிர்வாக உத்தியோகத்தர-வேத சிவாகம குருகுல கலாசாலை**

# கல்விமாணிப் பரீட்சைக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகக் கல்விமாணிப் பட்டப் பாடநெறி பகுதி I பரீட்சைக்கு விண்ணப்பம் செய்வதற்காக பயிற்சி நெறியைப் பயிலும் சகல ஆசிரியர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு தவறாது நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளரும் இணைப்பாளருமாகிய திருமதி த.வில்வநாதன் கேட்டுள்ளார். (உ)

# சுருக்கெழுத்துத் தட்டச்சுப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் பாடசாலையை விட்டு விலகியோரின் நன்மை கருதி சுருக்கெழுத்து, தட்டச்சுப் பயிற்சிகளை தமிழ், ஆங்கிலமொழிகளில் ஆரம்பிக்கவுள்ளது.

7 மாத காலம் வகுப்பறைப் பயிற்சியும், 5 மாத காலம் பொது அலுவலக செயன்முறைப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

ஆர்வமுடையோர் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன் வேலை நாட்களில் கழகத்தில் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கழகச் செயலாளர் கேட்டுள்ளார். (உ)

# சுகாதார தகவல்களை வெளியிட்ட ஊடகவியலாளர்களுக்கு விருது

(கொழும்பு)

குடும்ப நல சுகாதார விடயங்களை வெளியிட்ட சிறந்த ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்க சுகாதாரக் கல்விப் பணிமனையும் யுனிசெவ் அமைப்பும் தீர்மானித்துள்ளன.

அச்சு,இலத்திரனியல் ஊடகங்களில் மும்மொழிகளிலும் ஆக்கங்களை சமர்பித்தவர்கள் இவ்விருதுக்காக விண்ணப்பிக்கலாம்.

கடந்த ஆண்டு வெளியான பிரதிகள் இவ்விருதுக்காக தெரிவு செய்யப்படவுள்ளன.

நிறுவனத் தலைவரின் அத்தாட்சியுடன் கூடிய விண்ணப்பத்தை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சுகாதாரக் கல்விப் பணிமனையின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (தி)



முகாம் அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவரும் யாழ். கோட்டையின் மேற்கு புற நிலப்பரப்பினை படத்தில் காணலாம்.
படம் : க.பவன்

## போர்க் குற்றங்கள் புரிந்தனராம்

# அதிபர் புஷ், பிரதமர் பிளேயர் ஆகியோர் மீதும் சுவிற்சலாந்தில் வழக்குத் தாக்கல்

(பேர்ன்)

அமெரிக்க அதிபர் புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் ஆகியோர் மீது போர்க் குற்றங்கள் புரிந்ததாக சுவிற்சர்லாந்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஜெனிவாவைத் தலைமையிடமாகக் கொண்ட 'ஈராக் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆதரவு இயக்கம்' என்ற அமைப்பு இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளது.

அமெரிக்க,பிரிட்டிஷ் இராணுவம் படையெடுத்ததால் ஈராக்கில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் சார்பில் இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

புஷ்,பிளேயர் ஆகிய இருவரும் பதவியில் இருக்கும் போது சுவிற்சர்லாந்துக்குள் வந்தால் கூட சட்டப்படி அவர்கள் மீது வழக்குத் தொடர முடியாது என்று அரசு வழக்கறிஞர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கூட்டணிப் படைகளுக்குத் தலைமை தாங்கிய ஜெனரல் டாமி பிராங்ஸ் மீது வழக்குப் பதிவு செய்யப்படும் என்று பெல்ஜியத்தில் அரசு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் மார்ச் 20 ஆம் திகதி எடுக்கப்பட்ட போர் நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்ட 19 ஈராக்கியர்கள் சார்பில் இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு வளைகுடாப் போரின் போது குற்றங்கள் புரிந்ததாக அப்போதிருந்த அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் மீதும், பெல்ஜியம் நாட்டில் மார்ச் மாதம் 7 ஆம் திகதி ஈராக்கிய குடும்பங்கள் வழக்குத் தொடர்ந்துள்ளன.

மேலும் அப்போது அமெரிக்கக் கூட்டுப்படைகள் தளபதியாக விளங்கிய கொலின் பவல் துணை அதிபர் டிக் கென்னி உள்ளிட்டவர்களும் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புஷ்,பிளேயர் மீது வழக்குத் தொடர்ந்துள்ள இயக்கத்திடம் இருந்து மேலும் சில விளக்கங்களைக் கோரியுள்ளதாக சுவிட்சர்லாந்து அரசு வழக்கறிஞர் கூறினார்.(உ)

## பாக்.பயங்கரவாதி காஷ்மீரில் பலி

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீர் பூஞ் மாவட்டத்தில் உள்ள சூரன் கோட் பகுதியில் நிகழ்ந்த மோதல் சம்பவத்தில் இரு லக்ஷறி இ தொய்யா தீவிரவாதிகளைச் சுட்டுக் கொன்றிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பயங்கரவாதிகள் உள்ளதாகத் துப்புக் கிடைத்ததைத் தொடர்ந்து பாதுகாவல் படையினர் மனோவாலி மராப் என்கின்ற பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது ஏற்பட்ட மோதலில் இவ்விரு தீவிரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் பாகிஸ்தானைச் சேர்ந்த அபூமூஷ் என இனம் காணப்பட்டுள்ளார்.

மோதல் நடந்த பகுதியில் இருந்து 3 மகசின்களுடன் கூடிய ஒரு ஏ.கே. 56 ரக துப்பாக்கி எறிகுண்டுகள்-2, மற்றும் ஒரு வானொலி ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (உ-9)

# சீனக் கடற்படையின் நீர் மூழ்கிக் கப்பல் விபத்தில் சிக்கியது :70 பேர் பலி

(பீக்கிங்)

சீனக் கடற்படைக்குச் சொந்தமான நீர் மூழ்கிக் கப்பல் ஒன்று நீரில் மூழ்கியதில் அதில் பயணித்த 70 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

சீனக் கடற்பகுதியில் மேற்படி நீர் மூழ்கிக் கப்பல் பயணித்துக் கொண்டிருந்த வேளை, இயந்திரக் கோளாறு ஏற்பட்டதன் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்துக்குள்ளான கப்பலில் கடற்படை அதிகாரிகளும், கப்பல் ஊழியர்களும் இருந்ததாக நேற்று முன் தினம் செய்தி வெளியிட்டுள்ள சீன அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான சின்குவா இவ்விபத்துக் குறித்த மேலதிக தகவல்கள் எதனையும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை, விபத்தில் பலியானவர்களுக்கு சீன முன்னாள் அதிபரும் மத்திய இராணுவ அதிகாரி ஜியாங் ஜெமீனும் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளனர். (உ-2)

## இந்தியப் பெண்கள் இருவர்

# அமெரிக்காவில் உண்ணாவிரதம்

(நியூயோர்க்)

போபால் விஷவாயு விபத்தில் பாதிக்கப்பட்ட இந்தியாவைச் சேர்ந்த ரஷீதா பீ,சம்பா தேவி ஆகிய இரு பெண்களும் அமெரிக்காவில் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

மத்தியப் பிரதேச தலைநகர் போபாவில் 1984 ஆம் ஆண்டு யூனியன் கார்பைடு நிறுவனத்திலிருந்து வெளியேறிய விஷவாயுவினால் 8 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் பாதிப்படைந்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள் நஷ்டஈடு கோரி யூனியன் கார்பைடு நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்தனர். இந்நிலையில் இந்நிறுவனத்தை அமெரிக்காவைச் சேர்ந்த மற்றொரு நிறுவனமான டோவ் கெமிக்கல்ஸ் விலைக்கு வாங்கியுள்ளது.

எனினும்,யூனியன் கார்பைடு நிறுவனத்தின் சுற்றுச் சூழல் பாதிப்பு உள்ளிட்ட பொறுப்புக்களைத் தாங்கள் ஏற்க இயலாது என டோவ் நிறுவனம் தெரிவித்துள்ளது.இதை ஆட்சேபித்து நியூயோர்க் மாவட்ட நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுதள்ளுபடி செய்யப்பட்டது. இதை எதிர்த்து அவர்கள் அமெரிக்க நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தனர்.

போபால் விஷவாயு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் களுக்கு நீதி கோரி சதிநாத் சாரங்கி என்பவர் சர்வதேச அளவில் போராட்டம் நடத்தி வருகிறார். ரஷீதா பீயும்,சம்பா தேவியும் அவரை அணகி இப்போராட்டத்தில் தங்களையும் இணைத்துக் கொண்டனர்.

அமெரிக்காவில் மன்ஹாட்டன் நகரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இப்போராட்டத்தில் 30 பேர் கலந்து கொண்டனர். மசாசுசெட்ஸ் பகுதியைச் சேர்ந்த 24 மாணவர்களும் இதில் அடங்குகின்றனர்.

போபால் விஷவாயு கசிவு சம்பவத்தில் ரஷீதா பீயின் குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்து விட்டனர். ரஷீதா பீ பார்வைக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார். விஷவாயு தாக்குதலால் மூச்சுத் திணறலும் அவருக்கு ஏற்பட்டுள்ளது. (உ-2)

## ஈராக்வர்த்தக அமைச்சர்

# கைது தொடர்பில் முரண்பட்ட தகவல்

(வாஷிங்டன்)

மிஸ்பாஸ் காதர் ஹாதி என்பவர் பக்தாத்தில் கைது செய்யப்பட்டிருப்பதாக அமெரிக்க இராணுவம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

அமெரிக்க கூட்டணிப் படைகள் தேடும் 55 பேரின் பட்டியலில் ஹாதி 41 வது இடத்தில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஈராக்கின் முன்னாள் வர்த்தக அமைச்சர் முகம்மது மாதி அல்-சாலிஹ் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டதாக கூட்டணிப்படைகள் தெரிவித்துள்ளன.

ஆனால் இவர் கைது செய்யப்பட்டதாக கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி அமெரிக்கஇராணுவம் அறிவித்திருந்தது.

கூட்டணிப் படைகளோ வியாழக்கிழமை கைது செய்ததாக தற்போது கூறுகின்றன.

இந்த முரண்பாடுகளுக்கான காரணம் குறித்து அமெரிக்க இராணுவம் உடனடியாகப் பதிலளிக்க மறுத்து விட்டது. (உ-2)

## அமெரிக்காவின் பயங்கரவாதப் பட்டியல் நீள்கிறது

(வாஷிங்டன்)

ஜம்மு-காஷ்மீரில் இயங்கி வந்த ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்பை பயங்கரவாத இயக்கமாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்கா நேற்று முன்தினம் வெளியிட்ட உலக பயங்கரவாதம் பற்றிய அறிக்கையில் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

பாகிஸ்தானின் உளவு அமைப்பின் ஆதரவுடன் செயற்பட்டு வரும் ஷகாப் இஸ்லாமின் என்ற தீவிரவாத அமைப்பின் ஒரு பிரிவாக இயங்கி வரும் இந்த அமைப்பு காஷ்மீரில் பல்வேறு தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

ஆனாலும் காஷ்மீர் மக்களின் விடுதலைக்காக தாங்கள் போராடுவதாக இந்த அமைப்பு கூறி வருகிறது.

இந்த அமைப்புடன் பாகிஸ்தானில் இருந்து செயற்படும் அல் பாதர் ஹர்ஹஜ்புல் இஸ்லாமிக் என்ற அமைப்பையும், பங்களாதேஷில் இருந்து செயற்படும் பயங்கரவாத இயக்கங்களாக அமெரிக்கா மேலும் அறிவித்துள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் விஜயம் செய்யவுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

# குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகள் கைது

(லண்டன்)

இஸ்ரேலின் தலைநகரான ரெல்அவிவ் இல் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஐவரை கைது செய்துள்ளதாக பிரிட்டனின் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டதுடன் 55 பேர் காயமடைந்தமை தெரிந்ததே.

சந்தேக நபர்களில் 2 பெண்களும், 2 ஆண்களுமாக 4 பேர் டாபிஸியாரில் வைத்தும் மற்றும் ஒரு பெண் ரெட்டிலரியா பஸியாரில் வைத்தும் கைது செய்யப்பட்டதாக பெண் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் மத்திய லண்டனில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

ரெல்அவிவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை பிரிட்டிஷ் பிரஜையான21 வயதான அஸிஸ் கனிம் என்பவர் நடத்தியிருந்தார்.

பலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலிற்கும் இடையில் கடந்த 31 மாதங்களாக இடம் பெற்று வரும் மோதலின் போதுவெளிநாட்டுப் பிரஜை ஒருவர் தற்கொலைத் தாக்குதல் நடத்தி இருப்பது இதுவே முதல் தடவையாகும் (உ-9)

## இந்திய-பங்களதேஷ்

# ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்து

(புதுடில்லி)

இந்தியா-பங்களாதேஷ் படைகளுக்கு இடையிலான மோதல்களைத் தவிர்க்கும் ஒப்பந்தம் ஒன்றில் இவ்விரு நாட்டின் எல்லைப்படை அதிகாரிகளும் கையெழுத்திட்டுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் கெரோயின் கடத்தல்களைத் தடுத்து நிறுத்தவும் எல்லைக் கண்காணிப்பில் இரு தரப்பும் கூட்டாக ஈடுபடுவதற்கும் இவ் ஒப்பந்தம் வழிவகுக்கிறது.

இரு நாடுகளுக்குமிடையே 2001ஆம் ஆண்டு நடைபெற்ற மோதல்களும் அண்மையில் இந்திய பகுதியில் வாழ்ந்த பங்களாதேஷ் மக்களை இந்திய படையினர் பங்களாதேஷிற்குள் திருப்பி அனுப்பியதும் இந்நாடுகளுக்குமிடையிலான உறவுகளை கடுமையாகப் பாதித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும், தற்போது எட்டப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம் இந்திய-பங்களாதேஷ உறவுகளை வலுப்படுத்தியுள்ளதாக இருதரப்பு எல்லைப் படை அதிகாரிகளும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (உ-2)

# இந்தியா—பாகிஸ்தான் இடையில் மீண்டும் விளையாட்டுத் தொடர்பு

## பிரதமர் வாஜ்பாய் யோசனை

(புதுடில்லி)

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான மற்றுமொரு சந்தர்ப்பத்தை பாகிஸ்தானுக்கு தாம் வழங்கியிருப்பதாக பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய வாஜ்பாய்,

பாகிஸ்தானிற்கான இந்தியத் தூதுவரை நியமிக்கப் போவதாக குறிப்பிட்டார்.

மேலும் பாகிஸ்தானியத் தலைவர்களுடன் தாம் இருமுறை பேச்சு நடத்திய போதும் இம்முறை நடைபெறும் பேச்சுவார்த்தை உறுதியானதாகவும் தமது வாழ்நாளில் இறுதியானதாகவும் இருக்கும் என்றார்.

காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம் தேவை இல்லை.

2004 ஆம் ஆண்டுக்குள் காஷ்மீர் பிரச்சினை தீர்ந்து விடும் என்றார்.


இதேவேளை,ஈராக்கின் அமெரிக்க நிர்வாகி ஜெனரல் ஜே கார்னரின் உரை அவ்வளவு முக்கியமானது அல்ல எனப் புறக்கணித்துள்ளார்.

இம்மாதம் ஐ.நா பாதுகாப்பு சபையில் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ள பாகிஸ்தான் காஷ்மீர் பிரச்சினையை ஐ.நா பாதுகாப்புச் சபையில் எழுப்பப் போவதாக மிரட்டியிருப்பதாகவும் வாஜ்பாய் தனது உரையில் நிராகரித்துள்ளார்.

காஷ்மீர்ப் பிரச்சினைக்கு சிம்லா ஒப்பந்தத்தின் படி இரு தரப்பாகத் தான் தீர்வு காண வேண்டும் என்று குறிப்பிட்டார்.

புதிய சகாப்தத்தின் தொடக்கமாக இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையே விளையாட்டுத் தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்தலாம் என்றும் பிரதமர் யோசனை கூறியுள்ளார்.

இது பற்றி இருநாடுகளின் விளையாட்டுத்துறை நிர்வாகிகள் தீர்வு



காண்பார்கள். இஸ்லாமபாத்தடன் கலந்து பேசிய பிறகு உயர் அதிகாரிகள் நியமிக்கப் படுவார்கள். நாட்டின் கண்ணியமும் பாதுகாப்பும் ஒருபோதும் விட்டுக் கொடுக்கப்பட மாட்டாது என்றும் உறுப்பினர்களிடம் உறுதி கூறியுள்ளார். (உ-9)

# வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூக சேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகட்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003

வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவையின் வெற்றிடமாகவுள்ள சமூக சேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆண் / பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2003-05-30 ஆகும்.

01. இந் நியமனங்கள் நிரந்தரமானவையாக அமைவதுடன் அரசாங்க தாபனக் கோவை அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள், அரச சுற்றுநிருபங்கள் ஆகியவற்றிற்கு இயையவே மேற்கொள்ளப்படும்.

02. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :
1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழை 2003.05.30 ஆம் திகதிக்கு முன் பெற்றிருத்தல் வேண்டும்.
3. விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் / மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)
4. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
5. வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளாயினும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும்.

பின்வரும் ஆவணங்கள் மூலம் நேர்முகப்பரீட்சையின் போது இவற்றினை நிரூபித்தல் வேண்டும்
1. வாக்காளர் இடாப்பின் பிரதி
2. பதிவு தொடர்பான கிராம சேவை உத்தியோகத்தரிடமிருந்து பெற்ற சான்றிதழ்

03.

| பதவி | கல்வித் தகைமைகள் | வெற்றிடம் நிலவும் மாவட்டம் / பிரதேச செயலர் பிரிவு | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. சமூக சேவை உத்தியோகத்தர்<br>சம்பள அளவுத்திட்டம்<br>**79,080 - 12 x 2,460 - 108,600** | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்<br>(T-3-6) | மாந்தை மேற்கு, முசலி, பூநகரி, செட்டிக்குளம், நெடுங்கேணி, கோமரங்கடவல கந்தளாய், ஈச்சலம்பற்று, வாகரை, பதியத்தலாவ, தமண | 11 |
| 2. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>சம்பள அளவுத்திட்டம்<br>**79,080 - 12 x 2,460 - 108,600** | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்<br>(T-3-6) | மாந்தை மேற்கு, மடு, முசலி, மாந்தை கிழக்கு, பதவி ஸ்ரீபுர, ஒட்டிசுட்டான், பொத்துவில், வாகரை | 08 |
| 3. சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>சம்பள அளவுத்திட்டம்<br>**79,080 - 12 x 2,460 - 108,600** | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்<br>(T-3-6) | மன்னார் மாவட்டம் - 1<br>கிளிநொச்சி மாவட்டம் - 1<br>திருகோணமலை மாவட்டம் -4<br>மட்டக்களப்பு மாவட்டம் -1 | 07 |

04. இவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை மேற்கூறப்பட்டவாறு இருந்த போதிலும் சேவையின்தேவையினைப் பொறுத்து வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவதற்கோ அல்லது கூடுவதற்கோ இடமுண்டு. எவ்வாறாயினும் நிரப்பப்படும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவையின் ஆணைக்குழுவிற்குரியதாகும்.

**05. தெரிவுசெய்யும் முறை**

வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் போட்டிப் பரீட்சை பெறுபேற்று புள்ளிகளின் முதன்மை ஒழுங்கின் பிரகாரம் பரீட்சார்த்தி விண்ணப்பத்தில் தெரிவிக்கும் விருப்புரிமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர். இப்பரீட்சை 2003 ஆண்டு ஜூன் மாதம் இறுதியில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. பரீட்சையை ஒத்திவைக்கவோ அல்லது இரத்து செய்வதற்கோ வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு அங்கீகாரம் உண்டு. இப்பரீட்சை தமிழ்/ சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சை பின்வரும் பாடங்களை கொண்டிருக்கும்.

**1. பொது உளச்சார்பு 1 மணித்தியாலம் 100 புள்ளிகள்**

சொற்றொடர்கள் எண்கள் பற்றி உருவ வடிவங்களில் கொடுக்கப்படுகின்ற சிக்கலான விடயத்தில் பரீட்சார்த்திகள் காட்டுகின்ற அனுமானங்கள் மற்றும் பதில்களை ஆதாரமாகக் கொண்டு அப்பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்கிரகிப்பு அளவீட்டுணர்தல் மற்றும் கால அவகாசங்களுக்கிடையில் தொடர்புடைய புரிந்து கொள்வதில் பரீட்சார்த்திகளுக்கு இருக்கின்ற திறமையை அளவிடுதல்.

**2. பொது அறிவு 2 மணித்தியாலம் 100 புள்ளிகள்**

தேசிய பிராந்தியம் மற்றும் உலகம் பூராகவுமுள்ள பலதரப்பட்ட அமைப்பு சுற்றாடல்களிலும் எமது சமூகத்திலும் நிலவுகின்ற சமூக, கலாசார, கல்வி, அரசியல், விஞ்ஞான, பொருளாதாரம், விளையாட்டு ஆகியவற்றோடு தொடர்புடைய ஏனைய காரணிகள் தொடர்பாகவும் உள்ள பரீட்சார்த்திகளின் அறிவையும் தெளிவையும் அளவிடுவதற்காக.
நேர்முகப் பரீட்சையில் தகைமைகள் பரிசீலிக்கப்படும். இதன்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**06. நிபந்தனைகள்**

1. தெரிவு செய்யப்படுவோர் வடக்கு- கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற தயாராக இருத்தல் வேண்டும்.
2. தெரிவு செய்யப்படுவோர் நிரந்தர நியமனத்திகதியிலிருந்து குறைந்தது முதல் 10 வருடங்களாவது வடக்கு கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றுதல் வேண்டும். அத்துடன் தங்கள் நியமனம் வழங்கப்படும் நிலையத்தில் கட்டாயமாக ஐந்து வருடங்கள் சேவையாற்றுதல் வேண்டும்.

**07. பரீட்சைக்கட்டணம் :-**

விண்ணப்பதாரி வதியும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200/- ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்று அதனை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் 6004 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் வரவில் சேரக்கூடியதாக பிரதேசச் செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக்கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகாரணமாக வேறுமாகாணங்களுக்கு தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக்கட்டணமான ரூபா 200/- ஐச் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற பெயருக்கு காசுக்கட்டளையாகப் பெற்று விண்ணப்பதுடன் இணைத்தல் வேண்டும். இக்கட்டணம் வேறு எப்பரீட்சைக்கும் மாற்றப்படலாகாது.

**08. விண்ணப்பிக்கும் முறை :-**

இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கு அமைவாக "A4" அளவிலான (21 செ.மீ x 29 செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப்படிவங்களை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவத்தில் கேட்கும் விபரங்களை சரியான முறையில் நிரப்பா விடினும், அத்துடன் விண்ணப்பப்படிவம் முழுமையாக பூர்த்தி செய்யாவிடினும் அவருடைய விண்ணப்பம் எவ்வித மேன் முறையீட்டுக்கும் இடமளிக்காமல் முழுமையாகவே நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்கள் 2003-05-30 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, இல : 35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003" என்று பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

எவரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்கு தமது அனுமதி அட்டை எழுத்துப் பரீட்சைக்கு குறைந்த பட்சம் ஏழு நாட்களுக்கு முன்னராவது கிடைக்காவிடின், அதனைப் பற்றி உடனடியாக மேலே தரப்பட்ட முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

09. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு :-

| நகரம் | | எண் | நகரம் | | எண் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | 1 | திருகோணமல்ல | - | 6 |
| மன்னார் | - | 2 | மட்டக்களப்பு | - | 7 |
| வவுனியா | - | 3 | அம்பாறை | - | 8 |
| கிளிநொச்சி | - | 4 | கல்முனை | - | 9 |
| முல்லைத்தீவு | - | 5 | | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையில் உள்ள பரீட்சை நகரத்தில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்திற்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**வே. பொ. பாலசிங்கம்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

# மாதிரி விண்ணப்பப்படிவம்

## வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூக சேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003

சுட்டெண் :
(அலுவலக உபயோகத்திற்கு)

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்' தாரியின் பெயர் : திரு/திருமதி/செல்வி:-
தமிழில்:
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

03. தபால் முகவரி:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

04. பால்:- ஆண் M பெண் F

05. பிறந்த திகதி: வருடம்: மாதம்: திகதி:
2003.05.30ம் திகதியன்று வயது வருடங்கள்: மாதங்கள்: நாட்கள்:

06. நீங்கள் இலங்கைப் பிரஜையா? ஆம்/இல்லை

07. இனம்: சிங்களவர் இலங்கைத் தமிழர் இந்தியத் தமிழர்
முஸ்லிம் ஏனையவர்

08. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
(2) பிரதேச செயலாளர் பிரிவு:-
(3) வதியும் கால எல்லை:- தொடக்கம் வரை
(4) வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின், தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம்:-
(5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம்: மாகாணம்:
இடம்பெயர்ந்த ஆண்டு: மாதம்: திகதி:

09. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்: தமிழ்T / சிங்களம்S

10. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்:
(09வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக)

11. நீர் விண்ணப்பிக்கும் பதவியை விருப்புரிமை அடிப்படையில் குறிப்பிடவும்.
(03 வது பந்தியின் பிரகாரம்)
1. ----------------------------------------------------
2. ----------------------------------------------------
3. ----------------------------------------------------

12. கல்வித்தகமைகள்:
(i) பட்டத்தின் வகை:-
(ii) பட்டம் பெற்ற திகதி:-
(iii) பல்கலைக்கழகம்:-
(iv) பாடங்கள்:-

13. பிற கல்வி/ தொழில்சார் தகைமைகள்:-

14. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ---------------------------------------------------- பிரதேச செயலகத்தின் ---------------------------- ஆம் இலக்க ---------------------- ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன் என்றும் மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவன் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தி தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் எனது இணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திகதி: ---------------------------- ----------------------------------------
விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 74,160/= ற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:
விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/செல்வி ---------------------------- என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் ---------------------------- ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ---------------------- ----------------------------------------
கையொ' பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோ'கத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுதுதுகின்ற உத்தியோகத்தரின் முழுப் பெயர்:
பதவி :
முகவரி:
(பதவி முத்திரை)

16. (வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்திற்கு இடம்பெயர்ந்துள்ளவர்கட்கு)
மேற்படி விண்ணப்பதாரி வடக்கு கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக/வதிவிடமாக கொண்டவர் என்பதையும், அவர் --------------- திகதி முதல் தற்காலிகமாக இடம் பெயர்ந்து -------------------------------- மாகாணத்தில் வசித்துவருகின்றார் என்பதையும் இத் தற்காலிக வதிவிடத்தை ஆதாரமாக வைத்து இம் மாகாண சபையில் எப்பதவிக்கும் விண்ணப்பிக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ------------------------ ----------------------------------------
பிரதேச செயலாளர்/கிராம சேவையாளர்
ைகயொப்பம்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

17. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:-
இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி ---------------------------------------- அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கிறேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக்காலத்தில் எவ்வித ஒழுங்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ------------------------ ----------------------------------------
திணைக்களத் தலைவரின்
கையெப்பமும் பெயரும்

பதவி :
முகவரி :
(பதவி முத்திரை)

(C/6094)

புரிந்துணர்வு உடன்படிக்கை தடை விவகாரம்!

# கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் தலைவர் பிரபாகரனுக்கு ஆலோசனை

(கொழும்பு)

அரசாங்கத்தாலும், தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையினை தடை செய்வதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளரில் வின்சில்வா சமர்ப்பித்த மனு தொடர்பாக உரிய காரணங்களை முன்வைக்குமாறு மேல்முறையீட்டு நீதிமன்றம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மீண்டும் அறிவித்துள்ளது.

இந்தக் காரணங்களை பத்திரிகை வாயிலாக வெளியிடுமாறும் புலிகளின தலைவருக்கு நீதிமன்றம் ஆலோசனை வழங்கியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் சமர்ப்பித்துள்ள இந்த மனுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உட்பட 25 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேற்படி மனுவில் இரண்டாவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் தலைவரின் முகவரி கொழும்பு அலரி மாளிகை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இநத முகவரிக்கு அனுப்பப்பட்ட அழைப்பானை எவராலும் ஏற்றுக் கொள்ளப்படாததை அடுத்தே பத்திரிகை மூலம் காரணங்களை வெளிப்படுத்துமாறு மேல முறையீட்டு நீதிமன்றம ஆலோசனை வழங்கியுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சிராணி திலகவர்த்தன தலைமையில் 3 நீதிபதிகள் அடங்கிய குழுவினர் இம் மனுவை பரிசீலனை செய்தனர்.

இம்மனு எதிர்வரும் 19 ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (தி)

## உள்ளூராட்சி மன்ற சட்ட மூலத்தில் திருத்தம்

## அரசு துரித நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தும் பொருட்டு உள்ளூராட்சி மன்றச் சட்ட மூலத்தில் திருத்தங்களை கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான திருத்தச்சட்ட மூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக உள்ளூராட்சி மகாண சபைகள் அமைச்சர் அலிச் அலுவிகார தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்குமாகாண உளளூராட்சி மன்றங்களுக்கான பிரதி நிதிகளைத் தெரிவு செய்வதற்காக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுக்களை ரத்து செய்து புதிய வேட்பு மனுக்களை கோருவதற்கான அதிகாரங்களை தேர்தல் ஆணையாளருக்கு வழங்குவதற்கு ஏற்ற வகையிலேயே இந்தச் சட்ட மூலத்தில்திருத்தம் செய்யப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இத் தேர்தலை நடத்துவதற்காக முன்னர் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும்,தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

## கொழும்பு - மட்டு ரயில் சேவை ஒரு சில நாளில் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு - மட்டக்களப்புக்கான ரயில் சேவை இன்னும் ஓரிரு தினங்களில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மட்டக்களப்புக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த ரயில்வே திணைக்கள உயர் மட்டத தூதுக்குழுவினர் இதனை உறுதி செய்துள்ளனர்.

ரயில் பாதை அமைப்பு வேலைகளைப்பார்வையிடும்பொருட்டு திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர், உதவிப் பொறியியலாளர், ரயில் பாதை புனரமைப்பு பிரதம பொறியியலாளர் ஆகியோர் அடங்கிய குழுவினரே நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர்.

கடந்த மாதம் 12ஆம் திகதி இவ் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட போதிலும், ரயில் இரு தடவைகள் தடம் புரண்டதால் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (தி)

மூதூர் வன்முறைகள் குறித்து

## மனித உரிமைகள் ஆ.கு. விசாரணை நடத்தும்

(கொழும்பு)

மூதூர்ப் பிரதேசத்தில் கடந்த மாதம் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும் அவற்றிற்கான காரணங்கள் குறித்தும் இலஙகை மனிதஉரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தவுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இவ் விடயம் தொடர்பாக ஆராய இம்மாத இறுதியில் மூதூர்ப்பகுதிக்கு நேரில் செல்லவுள்ளனர்.

இவ் அதிகாரிகள் முஸ்லிம தலைவர்கள்,மதப் பெரியார்கள், மூதூர்பிரதேச மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி, தமிழ் மக்கள், இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரை சந்தித்து இச்சம்பவம் தொடர்பாக ஆராயவுள்ளனர்.

எதிர் காலத்தில் இத்தகைய சம்பவங்களை எவ்வாறு தவிர்க்கலாம் என்பது தொடர்பான வழிவகைகள் அரசாங்கத்துக்கு ஆணைக்குழுவினர் பரிந்துரைகளையும் வழங்கவுள்ளனர். (தி)

## ஜப்பானியத் தூதுவர் அகாஷி இலங்கை வந்து சேர்ந்தார்

(கொழும்பு)

ஜப்பானின் இலங்கைக்கான சிறப்புத்தூதுவர் யசூஷி அகாஷி 6 நாள் விஜயமாக நேறறு இரவு இலங்கை வந்துள்ளார்.

சமாதான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தல் புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகளை அமுல் செய்வது பற்றி ஆராய்வது ஆகியவற்றை கருத்தில் கொண்டே இவரது இலங்கை விஜயம் அமைந்ததாக ஜப்பானியத்தூதரகம் தெரிவித்துள்ளது.

விசேட தூதுவர் அகாஷி கொழும்பில் தங்கி இருக்கும்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ்,மிலிந்த மொறகொட, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷ, ஜனாதிபதியின் வெளிநாட்டு அலுவல்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் அரசியல் பிரமுகர்களையும், இலங்கையிலுள்ள சர்வதேச அமைப்புக்களின் பிரதி நிதிகளையும் இராஜதந்திரிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அடுத்த வாரம் வன்னி வரும் போது, முதல் முறையாக யசூசி அகாஷி புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திக்கவுள்ளார்.

அனுராதபுரம், கிழக்கு மாகாணம் ஆகிய பிரதேசங்களுக்கும் தூதுவர் செல்லவுள்ளார் என ஜப்பானியத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (தி)

## இலஞ்சம் பெறும் அரச அதிகாரிகளின் தகவல்களைத் தந்துதவுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

இலஞ்சம் பெறும் அரச அதிகாரிகள் தொடர்பான தகவல்களை தந்துதவுமாறு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாதாந்தச் சம்பளத்தை விட, மேலதிகமான வருமானங்களையும் சொத்துக்களையும் சேகரித்துள்ள அரச அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக பொது மக்கள் தகவல்களை வழங்க முடியும்.

அவ்வாறு சொத்துக்களை வைத்திருப்போருக்கு எதிராக இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் விசாரணைகளை நடத்த முடியும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொது மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கும் நடவடிக்கை ஒன்றை ஆணைக்குழுதற்போதுஆரம்பித்துள்ளது. (து)

## நிரந்தர சமாதானம் வேண்டி மன்னாரில் மாபெரும் பேரணி

(மன்னார்)

நிரந்தர சமாதானம் வேண்டி மன்னார் மாவட்டத்தில் நேற்று பேரணி இடம் பெற்றுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழு, வாழ்வோதயம் சர்வ மத அமைப்பு என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இப் பேரணியில் ஆயிரக் கணக்கில் மூன்று மதத்தவரும் கலந்து கொண்டனர்.

இப் பேரணியில் கலந்து கொண்டோர் பின்னடைவுகள் வந்தாலும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டும், புரிந்துணர்வு உடன்படிக்கை முழுமையாக அமுல் படுத்தப்படவேண்டும்,போர் வேணடாம் நிரந்தர சமாதானமே வேண்டும், சமாதான விரோதிகள் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் போன்ற கோஷங்களை எழுப்பினர்.

இப்பேரணியின் முடிவில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலய முன்றலில் பொதுக்கூட்டம் நடைபெற்று ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆகியோருக்கான மகஜர்கள் மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டன. (தி)

## தடைகள் மத்தியிலும் தொடர்கிறது படையினரின் முகாம் அமைப்பு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டையின் மேற்குப் புறத்தில் உள்ள நிலப்பரப்பில் புதிய முகாம் அமைக்கும் முயற்சி யில் படையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். நகர மத்தியில் நிலை கொண்டுள்ள 512வது படைப் பிரிவு அந்த இடத்தைவிட்டு அகல வேணடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப் பதை தொடர்ந்து யாழ். கோட்டையை அண்டிய யாழ். மாநகரசபைக்குச சொந்தமான காணியை உள்ளடக்கி முகாம் அமைக்கும் முயற்சி பொது மக்கள் காட்டிய எதிர்ப்பை அடுத்து தோல்வியில் முடிவடைந்தது.

இதனை அடுத்தே அரசாங்கத்திற்கு சொந்தமான கோட்டையின மேற்குப்புறமான காணியில் முகாமை அமைத்து 512 வது படைப்பிரிவை அங்கு நகர்த்துவ தென பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்து அதற்கேற்ப செயற்பட ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, இது ஒரு படை நகர்த்தல் முயற்சி அன்றி மக் களின் இயல்பு வாழ்வை ஏற்படுத் தும முயற்சி அல்ல என பொதுமக் கள் மற்றும் பொதுஅமைப்புக் கள், தமிழ் அரசியல் வாதிகளிட மிருந்தும் மீண்டும் பலமான எதிர்ப்புக்கிளம்ப ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தவிரவும், இது விடயத்தை சுட்டிக காட்டி கடந்த 1ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண் டோவுக்கு கடிதம் எழுதியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-4)

## ·பரீட்சைக்கு சென்றமாணவி விபத்தில் படுகாயம்

(நெல்லியடி)

பரீட்சைக்குச் சென்ற மாணவி பாதி வழியில் விபத்தில் சிக்கி படுகாயமுற்றார்.

கரவெட்டி தெற்கு மத்தொனியைச் சேர்ந்த கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி மாணவியான பா.விஜிதா (வயது20) என்பவரே நேற்றைய தினம் உயர்தரப் பரீட்சைக்காகச் சென்று கொண்டிருந்த வேளை, இவ்வாறு விபத்தில் படுகாயமடைந்துள்ளார். (உ-44)

மத மாற்றத் தடுப்பு விவகாரம்

## இந்து மக்கள் எனக்கு உறுதுணையாக செயற்பட வேண்டும் அமைச்சர் மகேஸ்வரன்

(கொடிகாமம்)



மாதாந்தம் தடுப்புச் சட்ட மூலத்தை அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க விருப்பதால் அனைத்து இந்து மக்களும் இது விடயத்தில் எனக்கு உறு துணையாக இருக்க வேண்டும்.

இரண்டாவது உலக இந்து மாநாட்டின் ஆரம்ப விழாவில் தலைமை உரையாற்றிய இந்து சமய விவகாரஅமைச்சர் தி.மகேஸ்வரன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் மகேஸ்வரன்,

அச்சம்,பயம் என்பவற்றுடன் காலம் கழித்த நாம் இன்று பயமின்றி வாழ்கின்றோம். இங்கு வாழும் ஒவ்வொரு இனத்தவரினதும் பாதுகாப்பு இன்றைய சூழலில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, இந்த சமாதானம் நிலை பெறுவது அவசியமானது.

இந்துக்கள் அனைவரும் ஒன்று பட வேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்து மதம் அஹிம்சை நெறியினை அடிப்படையாகக் கொணடது என்ற வகையில் ஈழத்துச் சைவர்களும் அறநெறியினை மிகவும் ஈடுபாட்டுடன் கடைப்பிடிப்பவர்கள் வனமுறைக் கலாசாரம் இவர்களுக்கு அந் நியமானது.

இந்தச் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுளள தடைகளைக் களைந்து சாந்தியும் சமாதானமும் ஏற்பட இந்த மாநாடு வழிவகுக்கும் என்றார். (உ)

## கல்வியியற்கல்லூரி மாணவர்களுக்கு

(இருபாலை)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற கல்லூரியின் இரண்டாம் தவணைக்கான வகுப்புக்கள் நாளை ஆரம்பமாகவுள்ளன.

அனைத்து 1,2ஆம் வருட மாணவர்களையும் இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4 மணிக்கு முன்னதாக கல்லூரிக்கு சமூகமளிக்குமாறு கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன்கேட்டுள்ளார். (த-11)

## பெற்றோலியப் பொருள்கள் விலை வீழ்ச்சி

(கொழும்பு)

உலக சந்தையில் பெற்றோலியப் பொருள்கள் மற்றும் காஸ் என்பவற்றின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட் டுள்ளதால் இப்பொருள்களின் விலை களில் குறைப்பு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்திருந்த யுத்தம் காரணமாக பெற்றோலியப் பொருள்கள் மற்றும் காஸ் விலைகளின் ஏற்றம் உலகச் சந்தை யில் எதிர்பார்க்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (தி)

## நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் பழையமாணவனும், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப்பீடாதிபதியுமான பேராசிரியர் க. சிற்றம்பலம் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பல பெறுமதி மிக்க அரிய நூல்களை பாடசாலையின் நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார். (உ)

## துறைமுக ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

துறைமுக அதிகார சபையில் கடமையாற்றும் ஊழியர்கள் பண்டாரநாயக்க பாலத்துக்கு அருகில் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

துறைமுக அதிகார சபையின் பாதுகாப்பு திருப்திகரமாக இல்லை எனத் தெரிவித்தே ஊழியர்கள் இவ்ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இவ் ஆர்ப்பாட்டம் காரணமாக துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள 4 கப்பல்களில் இருந்து பொருள்களை ஏற்றி இறக்கும் பணிகள் தடைப்பட்டன. (தி)

## இன்னு ஒரு தகவல்

# கருப்பையின் உள்ளே!

நாம் இந்த உலகத்திற்கு வந்து சேர்வதற்குமுன்பு ஓர் இடத்தில் கொஞ்சநாள் தங்கி இருந்தோமே. அந்த இடம் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? அதுதான் கருப்பை. பத்துமாதங்கள் அங்கே இருந்துவிட்டுத்தான் வந்திருக்கிறோம். இருந்தாலும் அங்கே என்ன நடக்கிற தென்பதைப் பற்றி யாருக்காவது நினைவு இருக்கிறதா? நிச்சயமாக இருக்காது! இற்றைநாள் வரையும் கருப்பைக்குள்ளே என்ன நடக்கிறது என்பதைப் பற்றி யூகமாகத்தான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது கேளா ஒலி வரைவுகள் மூலமாக அங்கே நடப்பதையெல்லாம் விபரமாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

கருப்பைக்குள் இருக்கும் குழந்தை கொட்டாவி விடுகின்றதாம். விரல்களைச் சப்புகிறதாம். கைக்கு எட்டுவதைப் பிடிக்கிறதாம். சோம்பல் முறிக்கின்றதாம். கொட்டகொட்ட விழிக்கிறதாம். முகத்தைக் கோணிக்கொள்கிறதாம். இவ்வளவையும் ஒரு டெலிவிஷன் திரையில் பார்க்க முடிகிறது. அந்த அளவுக்கு மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது.

கருப்பைக்குள்ளே சிசு ஒரு திரவத்திற்குள் மிதந்து கொண்டிருக்கிறது. கண் விழித்ததும் அது கொட்டாவி விட்டுக் கொண்டே கைகால்களை உதைத்துக் கொள்கிறது. கைகளை நீட்டி தொப்புள் கொடியைப் பிடிக்கிறது. அதோடு கொஞ்ச நேரம் விளையாடுகிறது. அதன்பின் கைக்கட்டை விரலை வாயிலே வைத்துக் கொள்கிறது. தாயின் இதயத்துடிப்பு செரிமானப் பாதையில் ஏற்படுகிற சததங்களையெல்லாம் கேட்டுக்கொண்டே இருக்கிறபொழுது, தாயின் குரல்கேட்பதை உணர்ந்து அதைக் கவனிக்கிறது. தாய் எழுந்து நடக்கிற பொழுது கருப்பை நீரின் லேசான குலுக்கலில் மெய்மறந்து மறுபடியும் தூங்கிப் போகிறது.

கருப்பையினுள்ளே மிகவும் அமைதியாக இருக்கும் என்று நினைக்காதீர்கள். ஒரு மைக்மூலமாக அங்கே உள்ள சத்தங்களைப் பதிவு பண்ணியிருக்கிறார்கள். தாயின் இதயத்துடிப்பு அங்கே டம் டம் என்று கேட்டுக் கொண்டேயிருக்கும். தாய் மூச்சுவிடுவது புஸ்புஸ் என்று கேட்டுக்கொண்டே இருக்கும். வயிற்றிலிருந்தும், குடலில் இருந்தும்வருகிற பல விதமான சத்தங்கள் தவிர வெளி உலகத்தில் உள்ள சப்தங்களும் உள்ளே கேட்கின்றனவாம். அதனாலே தான் கருவுற்ற தாய்மார்கள் இருக்கின்ற அறையில் றேடியோவும், டி.வியும் அலறுகின்ற அளவுக்கு வைக்கக்கூடாது என்று சொல்லுவது! சப்தம் போட்டுப் பேசுவதும் தப்பு. சண்டைபோடுவதும் தப்பு! சத்தமான இடங்களில் அவர்கள் இருக்கக் கூடாது.

கருப்பைக்கு உள்ளே இருக்கின்ற சிசு சும்மா இருப்பதில்லை. வெளி உலகத்திற்கு வந்த பிறகு சந்திக்கவேண்டிய சூழ்நிலைகளுக்கு, உள்ளேயே அது தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறது. கருப்பைக்குள்ளே குழந்தை மூச்சு விடுவதில்லை. இருந்தாலும் அதனுடைய உதரவிதானம் முச்சுவிடுவது மாதிரி அசைந்துகொண்டே இருக்கும். அங்கே அது எதையும் சாப்பிடவேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் கருப்பையிலே உள்ள திரவத்தை குடிக்கிறது. அப்படி குடிக்கின்ற பொழுது சில சமயம் அதற்கு விக்கல் கூட ஏற்படும். அந்தச் சமயம் தாயாருக்கு வையிற்றினுள் ஒரு தவளை குதிப்பது மாதிரி இருக்கும்.

சாதாரணமாக உள்ளேயிருக்கிற குழந்தைக்கு பசியோ தாகமோ ஏற்படாது! ஆனாலும் தாயார் சாப்பிடுகின்ற ஆகாரத்தில் சத்துப் பற்றாக்குறை இருந்தால் குழந்தைக்கும் சத்துப் பற்றாக்குறை ஏற்படும். ஒரு சிசு கருப்பையில் இருக்கிற பொழுது, ஒரு குறிப்பிட்டதாலாட்டுப் பாட்டை பாடிக்கொண்டே இருந்தால் அது அந்தப் பாட்டுக்கு ஏற்றபடி கை, கால்களை ஒரு குறிப்பிட்ட வகையிலே ஆட்டக் கற்றுக்கொள்ளுமாம். குழந்தை பிறந்த பிறகு அதே பாடலைப் பாடி அழுகிற குழந்தையை அமைதிப்படுத்தி விடலாமாம்.

இதுவரையும் சொன்னவைகள் மருத்துவர்களின் கூற்று. இனிச்சொல்வது நான். அதாவது தாலாட்டு யார் பாடுவது? குழந்தை வயிற்றிலே இருக்கும்போது தாயார் தாலாட்டுப் பாடுவதுதான் நல்லது. அப்பொழுது தான் சுகமாக காலை ஆட்டும். அப்பாக்கள் தாலாட்டுப் பாடினால் என்ன ஆகும் தெரியுமா? வயிற்றுக்குள்ளே இருக்கிற பொழுதே குழந்தை ஒரு தீர்மானத்திற்கு வந்துவிடும். வெளியே வந்தபிறகு காலாட்டுவதற்குப் பதிலாக உதைக்க ஆரம்பித்துவிடும்.

ஒரு வீட்டில் தொட்டிலில் ஒரு குழந்தை சத்தம் போட்டு அலறிக்கொண்டிருந்தது. அப்பா தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தார். வெளியே போய்யிருந்த அம்மா திரும்பி வந்தார். "சும்மா தொட்டிலை ஆட்டுகிறீர்களே, குழந்தை எப்படித் தூங்கும் ஒரு தாலாட்டுப்பாடக் கூடாதா?" என்றார். "அது முடியாது!" என்றார் அப்பா. அம்மா ஏனென்றார். "நான் தாலாட்டுப்பாட ஆரம்பித்தபிறகுதானே தூங்கிக் கொண்டிருந்த குழந்தை இப்படி அலற ஆரம்பித்தது" என்றார் அப்பா.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# ஸ்ரீ. சு. க – ஜே. வி. பி கூட்டு

# மீண்டும் போருக்கான ஏற்பாடு

## அங்கவீனமுற்ற படையினர் சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென யுத்தத்தில் அங்கவீனமுற்ற படையினர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அங்கவீனமுற்றபடையினர் சங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை யும் அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளமை அவர்களின் அரசியல் தந்திரம் என்றும், அரசியல் முதிர்ச்சியை இது காட்டி நிற்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், புலிகளின் தற்காலிக சமாதான இடைநிறுத்தத்தினால் மீண்டும் ஒரு போர் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபடடுள்ளன. இம்முயற்சி வெற்றி பெறுமானால் நாட்டில் மீண்டுமோர் போர் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்படும்.

எனவே, இவ்விரு கட்சிகளினதும் கூட்டணியைத் தடுத்து நிறுத்தப் பிரதமர் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (தி)

# இலங்கை இராணுவத்தில் முஸ்லிம் இளைஞர்களை அதிக அளவில் இணைத்துக் கொள்ளக் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் முஸ்லிம் இளைஞர்களை அதிகளவில் சேர்த்துக் கொள்ளுமாறு அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான அஷ்ரப் காங்கிரஸ் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் தவிசாளர் சுபைதீன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

மூதூர் மற்றும் தோப்பூர் பிரதேசங்களில் அண்மையில் நடைபெற்றது போன்ற வன்முறைச் சம்பவங்களைத் தவிர்ப்பதற்காக இந்த வேண்டுகோளை விடுவிப்பதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் எல்லைக் கிராமங்களில் வாழ்ந்து வரும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினரை நிறுத்த வேண்டும்.

முஸ்லிம்மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஊர்காவற்படைகள் அமைக்கப்படுவதோடு படையினரின் காவல் அரண்களும் அமைக்கப்பட வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (தி)

## அரசு – புலிகள் இடையிலான

# பேச்சு விரைவில் ஆரம்பிக்கும் என்பதில் இந்தியா நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியமுன்னணி அர்சாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப்பேச்சு வார்த்தைகள் மிக விரைவில் மீண்டு ஆரம்பிக்கும் என தாங்கள் நம்புவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வன்சிங்காவை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடதத்திய போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும நாடுகளுடன் இந்தியா நெருக்கமான தொடர்புகள் மூலம் ஆலோசனைகள் நடத்திவருவதாகவும் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகள் முதற்சுற்றின் 7ம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் தற்காலிக இடைநிறுத்தம், ஜூன் மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு ஆகியன குறித்தும் அமைச்சர் மிலிந்த மொறக்கொடவிடம் இந்தியத் தரப்பு ஆராய்ந்துள்ளது.

இதேவேளை, அமைச்சர் மிலிந்தமொறக்கொட தனது இருநாள் இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று நாடு திரும்பியுள்ளார். (தி)

## இராசி பலன்

04.05.2003

(சித்திரை 21, ஞாயிறு)

திருதியை ந. இ 11.32 வரை
ரோகினி மாலை 6.22 வரை
இராகுகாலம் 4.26 - 5.56
சுபநேரம் 8.56 - 10.26

**மேடம்**
வாக்குவாதம், காரிய தாமதம், கௌரவக் குறைவு, மாதர் நட்பு

**இடபம்**
தெய்வதரிசனம், நல்ல முயற்சி, வருமானம் அதிகரிக்கும், பிறர் உதவி

**மிதுனம்**
குடும்ப சுகம், கோபப்படுதல், அதிகாரம், பிரயாணம்

**கடகம்**
தொழில் முன்னேற்றம், முயற்சி கைகூடும், நிலைமாற்றம், மனமகிழ்சசி

**சிங்கம்**
கௌரவமான நிலை, சாதனை, உற்சாகம், புதிய சிந்தை

**கன்னி**
அமைதிக்குறைவு, எடுத்த காரியம் கைகூடும், கட்டுப்படுத்தல், தனவிரயம்

**துலாம்**
உறவினர் வெறுப்பு, திருடர் தொல்லை, காரிய தடங்கல், வேலையில் மந்தநிலை

**விருச்சிகம்**
உறவினர் வருகை, பணவருவாய், வாகன வசதி, தெய்வசிந்தை

**தனுசு**
சத்துரு ஜெயம், சுகவாழ்வு, தொழில் முன்னேற்றம், முயற்சி கைகூடும்

**மகரம்**
பிரயாண இடையுறு, குடும்பக் கவலை, நண்பர்கள் உதவி, உடல் நலக்குறைவு

**கும்பம்**
ரோகபயம், மனச் சஞ்சலம், முயற்சி தாமதம், பிறர் உதவி

**மீனம்**
கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு, நல்ல அனுபவம், வாக்கு மேன்மை

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

# சார்ஸ் நோயாளி எவரும் இலங்கையில் பலியாகவில்லை

(கொழும்பு)

வடமேல் மாகாணத்தில் சார்ஸ் நோய்க்கு இலக்காகிய நிலையில் இனங்காணப்பட்ட பெண் ஒருவர் குருநாகலில் இருந்து கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என வெளியான செய்திகளை வடமேல் மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு நிராகரித்துள்ளது.

வைத்தியபாிசோதனைகளின் படி இந்நோயாளி இருதய நோய்காரணமாகவே உயிரிழந்தார் என்பது தெரியவந்துள்ளது.

குருநாகல் பிரதேசத்தை சேர்ந்த பெண் ஒருவர் கடந்த 26 ஆம் திகதி சார்ஸ் நோய்க்கு இலக்காகி மரணமடைந்தார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

# தடிகொண்டு தண்டியாதே!

(கொழும்பு)

உடலுக்கு ஊறுசெய்யக் கூடியதான தடி கொண்டு தண்டிக்கும் விடயத்தை நிறுத்தக் கோரி ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி சர்வதேசத்தினமாக கொண்டாடப் படவேண்டுமென முதல்முதலாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு நிலையத்தலைவர் பேராசிரியர் ஹரேந்திரா த சில்வா இது பற்றி குறிப்பிடுகையில்,

சிறுவயதில் தடியினால் தண்டிக்கப்படும் மாணவர்கள், பின்னாளின் கொடூரமானவர்களாக மாறி சமூகத்திற்கு இடைஞ்சலாக் இருப்பார்கள் என மனோதத்துவியலாளர்கள் கண்டுள்ளனர்.

கொடூரங்களை பயங்கரவாதமும் இல்லாத சமூகமொன்றை நாம் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் உடலுக்கு ஊறுவிளைவிக்கும் தண்டனைகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக கல்வித் திணைக்களங்களின் கவனத்திற்கும் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளது. (உ)

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்
- குறள்

வலம்புரி

## பிள்ளையையும் நுள்ளி தொட்டிலையும்...

இலங்கையின் சமாதான முயற்சியில் இந்தியாவின் தலையீடு இப்போது வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது. இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதில் இந்தியா மிகவும் விருப்புடன் இருப்பதாக அந்நாட்டு அமைச்சர்கள் தெரிவித்திருந்தாலும், அவர்களின் வெளிப்படையான கருத்துக்கும் உள் நோக்கத்திற்கும் இடையே நிறைய வேறுபாடு உண்டு.

அதாவது, இலங்கையில் இனப்பிரச்சினை தீரவேண்டுமென இந்திய அரசு விரும்பினாலும் கூட, விடுதலைப்புலிகள் மீது கொண்ட பகைமை காரணமாக, ஓர் இனத்தின் அழிவை, அவ் இனத்தின் உரிமைகள் பறிக்கப்படுவதை மறைமுகமாக ஆதரிக்கும் நிலையிலேயே இந்தியா இருக்கிறது.

இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் முன்னோடி மாநாடு அமெரிக்காவில் நடைபெற்றபோது அதில் இந்தியா பங்குபற்றியிருந்தது. ஆனால், அம் மாநாட்டில் விடுதலைப்புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதாவது விடுதலைப்புலிகளை மாநாட்டுக்கு அமெரிக்கா அழைக்கவில்லை என்பதால் அந்த நடவடிக்கைக்கு தனது ஆதரவை தெரிவிக்கும் முகமாகவே இந்தியா அம் மாநாட்டில் பங்குபற்றியது என்று கூட எடுத்துக்கொள்ள முடியும்.

ஏனெனில், ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்வதில் பின்னடிப்பு காட்டுகிறது.

ஜப்பான் மாநாட்டில் விரும்பியோ விரும்பாமலோ விடுதலைப்புலிகள் பங்குபற்ற வேண்டியுள்ளதால், அம் மாநாட்டை புறந்தள்ளுவதற்கு இந்தியா முயற்சிக்கிறது.

இந்தியாவின் இந் நிலைப்பாடு காரணமாகவே இலங்கை அமைச்சர் மிலிந்த மொறகொட, சமாதான செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக, ஜப்பான் விசேட தூதுவர் அகாஸி ஆகியோர் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்தனர். இவர்களின் விஜயம் இந்தியாவில் மனமாற்றத்தை ஏற்படுத்துமா என்பது கேள்வியாக இருக்கின்ற அதே நேரம் மாநாட்டில் பங்குபற்றுவது குறித்து கருத்துத் தெரிவித்த இந்திய வெளியுறவு அதிகாரிகள் விடுதலைப்புலிகளைத் தடைசெய்த அமெரிக்கா தனது நாட்டில் நடத்திய மாநாட்டிற்கு புலிகளை அழைக்கவில்லை. அதே போல் புலிகளை தனது நாட்டில் தடை செய்த இந்தியா விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளும் ஜப்பான் மாநாட்டில் பங்குபற்றுமென எதிர்பார்ப்பது எவ்வகையில் நியாயமானது என கேள்வி எழுப்பியிருப்பது இந்தியாவின் நிலைப்பாட்டை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு பிள்ளையையும் நுள்ளி தொட்டிலையும் ஆட்டும் கதையாகவே உள்ளது.

# உயிர்ப்பின் புதுவாழ்வானது எட்டாத தூரத்திலல்ல மனங்களால் பெறக்கூடிய தூரத்திலேயே உள்ளது

எக்காலத்தையும் விட இன்று மனிதன் எதிர்காலத்தைச் சிந்தித்து சித்தரிக்க விரும்புகின்றான். அடிப்படையிலேயே மனிதன் தானே தனக்குள் தேடிக்கொண்டிருக்கின்றான். வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் இன்றைய உலகில் பயணிக்கும் நாம் சுகங்களையே நாடி ஓடுகின்றோம். எம் மனதில் எம் ஆவி மட்டுமல்லாது உடல் அதன் கூறுகள் அனைத்துமே முழுமைபெற ஆசையானது கொழுந்து விட்டு எரிகின்றது. இன்

### பரமபிதா காட்டிய பாதை

றைய மனிதனின் முக்கிய பிரச்சினையும் அடிப்படை உண்மையும் அவனது விடுதலை உணர்வுதான்.

''இறைவா இறப்பிலிருந்து வாழ்வுக்கு என்னை அழைத்துச் செல்'' - உபநிடதம் 13:27

''ஆண்டவரே திரும்பும் என் உயிரைக் காப்பாற்றும்'' திருப்பாடல் 6:4 போன்றவை. ஒவ்வொரு மனிதனும் இறப்பின் வாயிலில் நின்று உயிர்ப்புக்காகத் துடிப்பதை உணர்த்துகின்றது. ஒவ்வொரு மனிதனும் தன் உயிர்ப்பை [illegible] உண்மையாக்கப்பட்டு என்றும் வாழ வேண்டுமென்று துடிக்கின்றான். அதனாலேயே அவன் மரணத்தைக் கண்டு பயப்படுகின்றான். தன் ஆசைகளை சுட்டெரிக்கும் எரிமலையென மரணத்தைக் கண்டு நடுங்குகின்றான்.

### உயிர்ப்பு ஒரு சவால்

மனிதன் தன் வாழ்வு மரணத்தினால் தான் மாறுபடுகின்றதென்பதையும் மரணத்தை எதிர்கொள்ளும் வெற்றியே அதன் உயிர்ப்பு என்பதையும் மறந்துள்ளான். இவ்வுயிர்ப்பின் மூலமே புதிய வானம், புதிய பூமி என்ற நம்பிக்கைக் கீற்றுக்கள் பிறக்கின்றன. பொருள், பணம், மாண்பு என்பவற்றைத் தேடி அலையும் இந்தப் புதியதோர் வரலாற்றுக் காலத்தில் உயிர்ப்பென்பது ஒரு சவாலாகவே அமைந்துள்ளது. ஆனாலும் புதியதோர் அர்த்தத்தையும் கொடுக்கின்றது. ஆண்டாண்டு காலம் தேடிய பொருளை உயிர்ப்பிலே தான் கண்டடைகின்றான். உயிர்ப்பெனப்படுவது புதியதோர் [illegible] அர்த்தமும் அடைந்து மனிதனை மெய்மையில் ஒன்றாகின்றது.

உயிர்ப்பானது ஓர் சக்தியாக உருவெடுக்கின்றது. அவ் உயிர்ப்பின் சக்தி ஒவ்வொரு மனிதனிலும் உண்டு. அதனை நாம் தான் இனங்காண வேண்டும். அது ஓர் தெய்வீக சக்தி. பல்வேறு சவால்களையும் எதிர்ப்புக்களையும் தனிப்பட்ட சமூக வாழ்வுப் பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வலிமை வழங்குகின்றது. ஒரு மனிதனின் உயிர்ப்புச் சக்தியே ஒரு சமுதாயம் மாறத் துணை புரிகின்றது. கோழை மனத்தை குழி தோண்டிப் புதைத்து புத்துணர்வை உயிர்த்தெழச் செய்ய வேண்டும். நம் வாழ்வில் ஏற்படும் துன்பங்களிலிருந்து நம்பிக்கை உயிர்பெற வேண்டும். இதன் மூலம் நாம் நம் உள்ளங்களில் உயிர்த்தெழலாம்.

### உயிர்புக்குச் சக்தி

உள்ளத்தின் உயிர்த்தலானது நம் வாழ்வையே செழிமையாக்குகின்றது. உயிர்ப்பு நிகழ்வானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்ததாக அல்லாமல் மாறாக இன்றும் என்றும் நம்மிடையே இடம்பெற வேண்டும். இவ் உயிர்ப்பின் மூலமே நீதியும் அன்பும் தோழமையும் பொழியும் புது உலகு நனவாகும்.

நாளாந்தப் பயணம் உயிர்ப்பை எதிர்நோக்கியதாகவே அமைய வேண்டும். அப்பயணப் பாதையில் ஏற்படும் துன்பங்களும் சோதனைகளும் அந்த உயிர்ப்பிற்கு சக்தி ஊட்டுவனவாகவே அமையும். எம் சமுதாயம் கட்டிவைத்திருக்கும் சாதி, சமய, பொருளாதாரக் கல்லறைகளை உடைத்து எம்மில் உயிர்ப்பின் புத்துயிரைப் பெற்று புதிய வானம், புதிய பூமியை நோக்கி நடை பயில்வோம். புது வாழ்வு எமக்கு எட்டாத் தொலைவில் அல்ல. எம் மனங்களினால் பெறக் கூடிய தூரத்திலேயே உள்ளது. அதை நாம் தான் தேடி அடைய

வின்சன் மேரிகொலஸ்ரிக்கா

வேண்டும். தேடலே உயிர்ப்பிற்கு வழியாகும். இயேசுவின் உயிர்ப்பின் நினைவு எம் வாழ்வை உயிர்ப்பிக்கட்டும்.

# விட்டுக் கொடுத்தும் அனுசரித்து நடந்தும் வாழும் சுவிஸ் மக்களின் சமஷ்டி அமைப்பு சாலச் சிறந்தது

சுவிஸ் எங்கும் கூர்ந்து பரந்து ஆழ்ந்து நிற்கும் சமஷ்டியைப் பற்றி ஒவ்வொரு சுவிஸ் மகனும் புளகாங்கிதம் அடைகின்றான். சுவிஸின் ட்றிபேர்க் சர்வகலாசாலையில் அமைந்துள்ள சமஷ்டிப் பீடத்தினைப் பற்றியும் அதன் அதிபர் பேராசிரியர் தோமஸ் வ்ரீனர் பற்றியும் எப்போதும் பெருமையாகப் பேசிக் கொள்கிறது சுவிஸ் சமூகம். சமஷ்டி அமைப்பு, மொழிகள் தூய நோக்குடன் இணைந்து இயங்கும் வெவ்வேறு கலாசாரங்களுமே பெருமைக்கு மேலும் பெருமை தருவதாக அமைகின்றன.

சுவிஸ் சமஷ்டியின் திறமைகளை அறிவதற்கும், ஆராய்வதற்கும் உலகின் பல பாகங்களிலிருந்தும் புத்திஜீவிகள், அரசியல் ஆய்வாளர்கள். பத்திரிகை ஆசிரியர்கள் சென்றவண்ணமே உள்ளனர். இத்தாலத்துக்கு வருகை தருபவர்கள் எல்லோரும் நம் தூய சமஷ்டி முறையை வரவேற்கிறார்கள் என்பது முக்கியமல்ல. ஆனால் எல்லோரும் தெளிவாக அறிந்து கொள்ளக்கூடிய வகையில் சுவிஸின் முன்மாதிரியான பல்லின ''கலாசாரமும் பண்புடன் பகிர்ந்து கொள்ளும் மக்களது சமஷ்டியும்'' என்ற தலைப்பில் சமஷ்டி நிலையம் புத்தகமொன்றினை வெளியிட்டுள்ளது. ''நமது எதிர்கால வளத்திற்கும் சுவிஸ் நாட்டின் பலததிற்கும் அமைய எமது புதிய சமஷ்டி சட்டவாக்கத்தில் பாரம்பரியப் பண்புகளுக்கும் கலாசாரத்திற்கும் உண்மையாகவும் கண்ணியமாகவும் வாழ்வோம்'' என்ற வாக்கியம் துலாம்பரமாகத் துலங்குகின்றது. இவ்விடத்தில் சுவிஸிற்கு இணை சுவிஸேயாக விளங்குகின்றதன்றோ. பரீட்சார்த்தமாகவல்ல ஆனால் பண்பாக யேமன் பிரான்ஸ் மொழிகள் பத்திரிகையொன்றையும் அவ்வவ் நாட்டு பத்திராதிபர்களின் மேற்பார்வையில் பையல் அல்லது பையீன் என்ற தலைப்பில் வெளியிடுகின்றது.

### சிறப்பம்சம் கொண்ட சமஷ்டி முறை

சமாதானப் பாதையில் சாவகாசமாக வீறு நடை போட்டு முன்னேறும் ஸ்ரீலங்கா அரசிற்கும் சுவிஸின் புனித சமஷ்டி முறைகளை விளக்குவதற்கும் விமர்சிப்பதற்கும் ஆழ்ந்த அக்கறையும் ஆவலும் காட்டி வருவது அவர்களின் சீரிய பண்புகளை சிறப்புடன் காட்டி வருகின்றது எனக் கூறின் சாலப் பொருந்தும்.

சுவிஸ் நாட்டின் சிறப்பம்சத்தைக் கொண்ட சமஷ்டி அரசின் அமைப்பினை அறிந்து கொள்ளும் நோக்குடன் எல்.ரி.ரி.ஈயின் பிரதிநிதிகள் குழுவொன்று இம்மாதம் நடுப்பகுதியளவில் அங்கு செல்ல இருக்கின்றது. ஜனநாயகக் கோட்பாடுகளுக்கமைய செயற்படும் சுவிஸின் சட்டவாக்கங்கள் இவர்களைப் பிரமிக்க வைக்கும் எனப் பெருமையுடன் கூறலாம்.

பல்லினக் கலாசாரம் ஒரு நாட்டினது முழுமை எனக் கருதும சுவிஸ் நாட்டினர் எமது நாட்டிற்குதவப் பொறுமையுடனும், பெருமையுடனும், காத்திருக்கிறார்கள். பல்லின கலாசாரமுள்ள மக்கள் இணைந்து இதயபூர்வமாக வாழ முடியும் என வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கும் சுவிஸ் நாடு எமது ஈழ வளநாட்டிலும் இத்தகையதொரு அமைப்புமுறை ஏற்பட முன் முயற்சி மேற்கொண்டுள்ளார்கள் என்பது பெருமையுடனும், பெருமிதத்துடனும் குறிப்பிடக் கூடியதொன்றாகும். சுவிஸ் சமஸ்டியின் கூட்டுறவு 23 மாகாணங்களைக் கொண்டதாகும்.

### நான்கு தேசிய மொழிகள்

ஜேர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், றோமனிஷ் ஆகிய நான்கு மொழிகளும் தேசிய மொழிகளாக அமைந்துள்ளன். அரசுகளுக்கு பலதரப்பட்ட சக்தி வாய்ந்த அதிகாரங்கள் உண்டு. சுவிஸ் மத்திய அரசுடனோ அல்லது சமஷ்டி அரசுடனோ மகா புரிந்துணர்வுடன் நடந்து கொள்கின்றார்கள். சுவிஸ் சமஷ்டி அரசின் முக்கிய அம்சங்களாவன:- மத்திய அல்லது சமஷ்டி அரசின் கட்டுப்பாட்டிலுள்ள விடயங்களாவன.

01. வெளிவிவகார விடயங்கள்
02. பாதுகாப்பும், பாதுகாப்புப் படைகளும்
03. மாகாணத்தின் அல்லது கன்ரனில் பெரிய அளவுப் புரட்சிகள் தோன்றினாலேயன்றி மற்றைய நேரங்களில் கன்ரன் அதிகாரங்களில் பாதுகாப்புப் படை தலையிடாது.
04. பணம், விநியோகம், கட்டுப்பாடு ஆகியன.
05. சட்டவாக்கங்கள், சூதாட்டம், லாட்டரிகள்.

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தலும், அனுசரித்து நடப்பதும், நம்பிக்கையுமே சுவிஸ் சமஷ்டியின் முதுகெலும்பாக அமைந்துள்ளது எனக் கூறின் சாலப் பொருந்தும். அங்கு இன பேதமில்லை. மேற்குறிப்பிட்ட நான்கு இனங்களும் நாட்டின் எப்பகுதியிலும் சுதந்திரமாக வாழலாம். இன வேறுபாடின்றி எந்த மாகாணத்திலும் வாழலாம்.

மூர்த்தி

# புதிய திரைப்படங்களை அனுமதி பெற்றபின் வெளியிடுக

## திரைப்பட வழங்குநர் சங்கம் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

புதிய திரைப்பட ஒளி நாடாக்களை வெளியிட விரும்பும் வீடியோ நிலைய உரிமையாளர்கள் இன்றும் நாளையும் எமது சங்கத்தில் பதிவுகளை மேற்கொண்டு அனுமதியை பெற்றபின் புதிய திரைப்பட ஒளி நாடாக்களை வெளியிடுமாறு யாழ். மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவு சங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி யாழ்ப்பாணத்தில் ஒளி நாடாக்களை வெளியிட விரும்புவோர் பலாலி வீதியிலுள்ள திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்திலும், வடமராட்சிப் பகுதியில் ஒளிநாடாக்களை வெளியிட விரும்புவோர் நெல்லியடியில் உள்ள திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்திலும் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-5)

# இணுவில் பொதுநூலகத்தில் இந்துமத எழுச்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

2-வது உலக இந்து மாநாட்டை ஒட்டிய எழுச்சி நிகழ்வுகளை ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம், இணுவில் பொதுநூலகம், திருநெறிய தமிழ் மறைக் கழகம், இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆகியன இணைந்து இணுவில் பொதுநூலகத்தில் நடத்தி வருகின்றன.

அதன் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று ஓய்வுபெற்ற அதிபர் ச. திருஞானசம்மந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்வில் ''மனம் போல் வாழ்வு'' எனும் தலைப்பில் வ. பாலசண்முகனின் சொற்பொழிவும், ''அர்த்தமுள்ள இந்துமதம் என்ன சொன்னது?'' எனும் தலைப்பில் இரா. அருட்செல்வம், க. சத்திதாசன், ச. சிதம்பரம் ஆகியோரின் கவியரங்கமும் இடம்பெறவுள்ளது.(ந-5)

## பாடசாலை வரவு பார்வை

(கொழும்பு)

5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் பாடசாலை வரவு நாட்களைக் கவனத்திற் கொண்டே இனிமேல் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## பஸ்நிலையம் இருளில்

(நெல்லியடி)

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் சீராக எரிவதில்லை. இதனால் பஸ் தரிப்பு நிலையத்தில் இரவு நேரங்களில் இருள் சூழ்ந்துள்ளது.(உ-44)

## தினசரி தியானம்

### உயர்வின்மாற்றம்

புத்தரைப் போல் கருணையும், பீஷ்மரைப் போல் தூய்மையும், அரிச்சந்திரனைப் போல் வாய்மையும், பீமனைப்போல் தைரியமும் கொள்ளுங்கள். உங்கள் கண்கள் அன்பாகப் பார்க்கட்டும். நாக்கு இனிமையாகப் பேசட்டும். கைகள் மிருதுவாகத் தொடட்டும். உங்கள் காதுகள் இறைபுகழால் நிறையட்டும். களைப்பின்றித் தொண்டாற்றுவதன் மூலம் வறுமையிலும், துயரங்களிலும் உள்ளவர்களைத் தேடிக் கண்டுபிடித்து உற்சாகப்படுத்தி ஆறுதலைத் தாருங்கள்.

சுவாமி சிவானந்தர்

# ஹலோரெஸ் நிறுவனத்தின் வாகன கண்ணாடிகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அகற்றும் குழுவான ஹலோரெஸ் நிறுவனத்தின் வாகனக் கண்ணாடியை இனந் தெரியாத சிலர் நேற்று முன்தினம் இரவு அடித்து நொருக்கியுள்ளனர். நாவலர் வீதியில் அமைந்துள்ள அதனது தலைமைக் காரியாலயத்தின் முன் நின்ற வாகனத்தின் கண்ணாடியே அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள வீடொன்றின் கண்ணாடிகளும் அடித்து நொருக்கப்பட்டதுடன் இராசாவின் தோட்டம் என எழுதப்பட்ட பெயர்ப் பலகையும் தூக்கி எறியப்பட்டுள்ளது. இச்சம்பவங்கள் ஒரே இரவில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## வெளிநாட்டு...

வே. பிரபாகரனைச் சந்திக்கவுள்ளார்.

சமாதானப் பேச்சுக்களை தற்காலிகமாக இடைநிறுத்திக் கொள்வதாக புலிகள் அறிவித்த பின்னர் தலைவர் பிரபாகரன் சந்திக்கவுள்ள முதலாவது வெளிநாட்டு தூதுவர் அகாஸி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எதிர்வரும் 15,16ம் திகதிகளில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் குழுவுடனான சந்திப்பு வன்னியில் இடம்பெறவுள்ளது.

இச் சந்திப்பில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் கண்காணிப்புக் குழுத்தலைவர் ரெலவ்சன் ஆகியோரும் இடம்பெறவுள்ளனர்.

வன்னியில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தங்கியிருக்கும் காலத்தில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் நடத்தவுள்ள சந்திப்புக்கள் சமாதான முயற்சியில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

## கோட்டைப்...

குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தற்போதைய நிலைகளில் இருக்கும் படையினர் அவ் இடங்களைவிட்டு தூர விலக முடியாதெனவும், அத்தகைய இடங்களுக்கு அண்மையாகவே புதிய முகாம்களை அமைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை புலிகளுக்கு திரும்பத் திரும்ப அரசாங்கம் எடுத்துக் கூறி வருவதாகவும், இது விடயத்தில் புலிகள் கடும் போக்குடன் இருப்பது அவ்வளவு வரவேற்கக் கூடியது அல்ல என்றும் ஒஸ்ரின் பெர்னாண்டோ அப் பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## சொற்பொழிவு

(ஆனைக்கோட்டை)

2வது இந்து மாநாட்டை ஒட்டி சாவல்கட்டு ஸ்ரீ அத்திக்குமரி ஞான வைரவர் தேவஸ்தானத்தில் இன்று பிற்பகல் 4மணிக்கு சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. இந்து சமயத்தின் மகத்துவம் என்ற தலைப்பில் இச் சொற்பொழிவை ஆசிரியர் கோகுலம் நிகழ்த்தவுள்ளார். (ந-201)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் தாக்கப்பட்டார்

(கொழும்பு)

ஈ.பி.டி.பி. காங்கேசன்துறை அமைப்பாளர் நேற்று முன்தினம் இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டு தாக்கப்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாக இலங்கை வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

ஈ.பி.டி.பி.யின் காங்கேசன்துறை அமைப்பாளரும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான வேலு என்பவரே தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரும்பிராயில் உள்ள தனது சகோதரியின் வீட்டிற்கு வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த போது வாகனத்தை மறித்த இளைஞர் குழு ஒன்று தன்னை அழைத்துச் சென்று தாக்கியதாக அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளாராம். (ந-5)

# புதிய முகாம் அமைப்பதற்கு தீவக நலன் காப்பகம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டைப் பகுதியில் புதிய இராணுவ முகாம் அமைப்பதற்கு படையினர் மேற்கொண்டு வரும் முயற்சியை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கோரி தீவக மக்கள் நலன் காப்பகம் யாழ்ப்பாணம் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு அவசர மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

512-வது படையணிக்கு யாழ்ப்பாணம் கோட்டை பகுதியில் படை முகாம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பும் மக்களது அபிலாசைகளை முற்றாக புறம் தள்ளுவதாக உள்ளது. எனவே, இது ஸ்ரீலங்கா அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இவ் உடன்பாட்டிற்கு முற்றிலும் விரோதமான முறையில் அரசு தன்னிச்சையாக அமைச்சரவையில் தீர்மானம் எடுத்து யாழ். கோட்டைப் பகுதியில் புதிய இராணுவ முகாம் அமைக்கும் பொறுப்பை இராணுவத்திடம் கையளித்துள்ளது. இது குறித்து தீவக மக்கள் நலன் காப்பகம் கடும் எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவிக்கிறது.

நிரந்தர அமைதி, சமாதானம், சகவாழ்வு தோன்றி நிரந்தரமான அரசியல் தீர்வு காணப்படும் என எண்ணியிருந்த மக்களுக்கு இப் புதிய படை முகாம் அமைப்பு பேரிடியாக அமைந்துள்ளது.

இப் புதிய இராணுவ முகாம் அருகில் தான் அனைத்து தீவுப் பகுதிகளுக்கான ஒரே தரைவழிப் பாதை அமைந்துள்ளது. இது தீவக மக்களின் போக்குவரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

## வெடிபொருளுடன் இருவர் கைது

(கொழும்பு)

ஜெலிவ்னைட் எனப்படும் அதி சக்தி வாய்ந்த வெடி பொருட்களை மன்னாருக்கு கொண்டு செல்ல முயன்ற இருவரை நீர்கொழும்பு பொலிஸார் கைது செய்துள்ளனர். கைப்பற்றப்பட்ட ஜெலிவ்னைட் வெடிபொருட்கள் மன்னாருக்கு கொண்டு செல்லப்படவிருந்ததாகவும், இவை தற்பொழுது நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்துடன் மினுவாங்கொட பகுதியைச் சேர்ந்த இரண்டு வர்த்தகர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அவர்களைக் கைது செய்ய விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-3)

## திரைப்பட இயக்குநர் நேற்று தற்கொலை

(சென்னை)

பிரபல தென்னிந்திய திரைப்பட இயக்குநர் ஜீ.கே. வெங்கடேஸ் நேற்றுத் தற்கொலை செய்துகொண்டார்.

தற்கொலை செய்து கொண்ட ஜீ.கே. வெங்கடேஸ் நூற்றுக்கணக்கான படங்களை இயக்கியிருந்ததுடன் பல படங்களை தயாரித்து வெளியிட்டுள்ளார்.

ஜீ.கே. வெங்கடேஸின் தற்கொலைக்கான காரணம் எதுவும் உடனடியாக தெரிவிக்கப்படவில்லை.(வ)

## கடற்பரப்பில் பீரங்கி வேட்டுக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக்கடலில் இன்று அதிகாலை ஒரு மணி முதல் பீரங்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

எனினும் இது பற்றிய மேலதிக தகவல் எதுவும் தெரியவரவில்லை. (ந)

## டக்ளஸின்...

கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மேற்படி படுகொலைச் சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளே காரணம் எனக் குற்றம் சாட்டி தம்மீது வீண் பழி சுமத்துவதாகவும், தமிழ்க் கட்சிகளுக்கு இடையில் நிலவும் உட்கட்சி பூசல்களே இதற்குக் காரணமாக இருக்கலாம் எனவும் அம்மறுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## கரவெட்டி...

விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் கரவெட்டி முன்னாள் பிரதேச சபைத் தலைவர் முகத்தில் சூட்டுக் காயத்திற்கு இலக்காகி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

அவருடன் கூடச் சென்ற ஏனைய இரண்டு ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் வாகனத்தில் இருந்து குதித்து தப்பியோடியுள்ளனர். வாகனத்தின் முன் கண்ணாடி நொருங்கிய நிலையில் காணப்படுகிறது.

இதேவேளை மேற்படி படுகொலைச் சம்பவத்தை அடுத்து பொலிஸார் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். இச்சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மரண விசாரணையை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பணித்தார். நேற்று இரவு 10மணியளவில் சடலம் யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-24-43-52)


## வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்தின் பனிக்கட்டித் தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கு, பனிக்கட்டித் தொழிற்சாலையில் வேலை செய்த அனுபவமுள்ளவர்களிடமிருந்தும் வேலைசெய்யக்கூடியவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 08-05-2003ஆம் திகதிக்கு முன்னதாக எமது காரியாலயத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

முகாமையாளர்
844, புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டட்
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

(C/6095)

## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்

தொண்டைமானாறு வெளிக்கள நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் மிக விரைவில் நடைபெற இருப்பதால் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் தமது பிரேரணைகளை 19-05-2003க்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

பிரேரணைகள் அனுப்ப வேண்டிய முகவரி:
திரு. கே. எஸ். குகதாசன்
70/10, அரசடி வீதி
யாழ்ப்பாணம்

கே.எஸ். குகதாசன்
தலைவர்

பொ. சிவானந்தராசா
செயலாளர்

03.05.2003 (C/6097)

RAMCO CEMENT RAMCO CEMENT RAMCO CEMENT RAMCO CEMENT RAMCO CEMENT

## RAMCO CEMENT
## ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

இலங்கையில் மட்டுமா இல்லை

இந்தியாவில் மட்டுமா இல்லவே இல்லை

ஆசியாவின் முதலாம் தர (நம்பர் 1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் சீமெந்து ராம்கோ சீமெந்து (கோபுர மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்தியாவில் விற்பனையில் முதல் தர சீமெந்து ராம்கோ சீமெந்து
SLS-107 அங்கீகாரம் பெற்றது
ISO-9002 தரம் பெற்றது
BSS-12-1991 தரத்திற்கு அமைவானது

தற்பொழுது ராம்கோ சீமெந்து பருத்தித்துறை இறங்கு துறையில் இறக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

குறிப்பு:—
★ முன் கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும்.
★ குடாநாட்டு மக்களின் பல கோடி ரூபாய் பணத்தை மீதப்படுத்திய முதலாம் தர சீமெந்து ராம்கோ சீமெந்து.

ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்கள்

ஈஸ்வரபகவான் & கொம்பனி

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P .No. 021-222 2350 (C/5998)

RAMCO CEMENT RAMCO CEMENT RAMCO CEMENT RAMCO CEMENT RAMCO CEMENT

## தாதிகள் பயிற்சிப்பாடசாலை விரிவுரை மண்டபம் கட்டுவதற்கான கேள்வி கோரல்

யாழ். போதனா வைத்தியசாலை தாதிகள் பயிற்சிப் பாடசாலை விரிவுரை மண்டபம் கட்டுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை யாழ். வைத்தியசாலையில் 10.05.03 வரை மீளளிக்கப்படாத ரூபா 100/= கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 17.05.2003 காலை 10.00 மணியாகும்.

பணிப்பாளர்
வைத்திய கலாநிதி எஸ். சதுர்முகம்
அரசினர் பொது வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

(C/6096)

## MEDICAL CHECK UP
## வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.